விலை சதம் 25. தொலைபேசி 23411

சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆவணி 6 உ (22-8-71) ஞாயிறு ஜ. ஆகிர் பிறை 30 புத்தகம் 25 இதழ் 3

# நாகநாதன் பூதவுடல் நல்லடக்கம்

## நெஞ்சம்நிறைந்த தலைவரின் மேனியை நிலமகள் தழுவிக்கொண்ட நெக்குருகும் காட்சி!

## கத்தோலிக்க, சைவமத பிரார்த்தனைகளுடன் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன!

கொழும்பு ஆகஸ்ட் 19—

பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் 'கோ' வெனக்கதறியழ, தமிழரசுத் தந்தையும், கட்சியின் ஏனைய தலைவர்களும், கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆயிரக்கணக்கான தொண்டர்களும் ஏனைய அரசியற் கட்சிகளின் தலைவர்களும் வேதனையால் விம்மியபடி நிற்க கத்தோலிக்க, கிருத்துவ சைவ மத பிரார்த்தனைகளுக்கு மத்தியில் இன்று மாலை 6-00 மணிக்கு கொழும்பு (பொரல்லை) கனத்தை மயானத்தில் இரும்பு மனிதர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் அவர்களின் சடலம் நல்லடக்கம செய்யப்பட்டது.

> **டாக்டரின் கடைசிப் பொன்மொழி**
>
> 'தமிழனை அடிக்கிறவனுக்கு அடிக்காத தமிழனை அடியுங்கள்!' —டாக்டர் நாகநாதன்.
>
> (தமிழ்த்தாய் மன்றக் கூட்டத்தில் பேசியது)

இதற்கு முன் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் குமுறிய மழையையும் பொருட்படுத்தாது பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கலந்துகொண்டு மறைந்த தலைவருக்கு தமது இறுதி மரியாதையை செலுத்தினர். சுமார் ஒரு மைல் நீளமான இந்த ஊர்வலத்தின் முன்னே தமிழரசுக்கட்சியின் பிரமாண்டமான மூவர்ணக் கொடியொன்று எடுத்துச் செல்லப்பட்டது. நாகநாதன் அவர்களின் சடலமும் மூவர்ணக் கொடியினால் மூடப்பட்டிருந்தது.

டாக்டரின் சடலம் அடக்கம் செய்யப்பட்ட சமயத்தில் 'எங்கள் ஈழத்தமிழ் நாடு' எனும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன், 'நாகநாதன் நாமம் வாழ்க' — அவர் தம் உணர்ச்சி வளர்க' என்று தமிழ் இளைஞர்கள் முழக்கமிட்டனர்.

அமரராகிவிட்ட டாக்டர் நாகநாதன் அவர்களின் இறுதிச் சடங்குகள் இன்று மாலை கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. டாக்டரின் சடலத்துக்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் அரசியல் கலப்பற்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்களும் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் துக்கம் தோய்ந்த முகங்களுடன் நாகநாதன் அவர்களது வீட்டில் காலையிலிருந்தே குழுமத் தொடங்கினர்.

டாக்டருக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்கென யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், மலைநாடு போன்ற இடங்களிலிருந்து ஏராளமான தமிழ் மக்கள் தலைநகரில் வந்து திரண்டிருந்தனர்.

இறுதிச் சடங்குகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெற்றன.

இறுதி ஊர்வலம் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாயிற்று. நாகநாதனின் பூதவுடல் கொண்ட பெட்டியை தமிழரசுத் தந்தையும் தமிழரசுக்கட்சித் தலை

## தலைநகரில் நடந்த பிரமாண்டமான இறுதி ஊர்வலம்!

வர் திரு. சி. மூ. இராசமாணிக்கமும் தாங்கி வந்து ரதத்தில் ஏற்றினர். சடலம், மஞ்சள், சிவப்பு, பச்சை ஆகிய மூன்று நிறங்களைக் கொண்ட தமிழரசுக் கொடியால் சுற்றி மூடப்பட்டிருந்தது.

இரதத்தின் கயிற்றினை தமிழரசுத்தந்தை இழுத்து ஊர்வலத்தை தொடக்கி வைத்தார். ஊர்வலத்தில் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. சிவசிதம்பரம், ஜனுப் அசீஸ் எம். பி. திரு. தொண்டமான், ஆனந்தசங்கரி, அருளம்பலம் உட்பட மாற்றுக் கட்சிகளின் தலைவர்கள்பலர் கலந்துகொண்டனர். தமிழரசு பா. உ. க்களும் கட்சிப் பிரமுகர்களும் தொண்டர்களும் இரதத்தை தங்கள் கைகளினால் இழுத்துச் சென்றனர்.


மழை குமுறி கடுமையாகத் தூறியபோதும் அதைப் பொருட்படுத்தாமல் பலாயிரக் கணக்கான தமிழ் மக்கள் இந்த ஒரு மைல் நீள ஊர்வலத்தில் கலந்து கொண்டு, தமிழர் தலைவர் ஒருவருக்கு தலைநகரில் இப்படியொரு மரண ஊர்வலம் இதற்கு முன் நடைபெற்றதில்லையெனும் படி சிறப்பித்தனர்.

ஊர்வலத்தின் முன்னால் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை சார்பில் எடுத்துச்செல்லப்பட்ட மலர் வளையத்தில் 'தியாகி

(2-ம் பக்கம் பார்க்க)

## நாகா இரங்கற் கூட்டங்கள்

டாக்டர் நாகநாதனின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டங்களை தமிழரசுக் கட்சி ஒழுங்குசெய்து வருகிறது: இதன்படி 21-8-71-ல் திருகோணமலை முற்றவெளியிலும், 22-8-71 யாழ் முற்றவெளியிலும், 23-8-71 கிளிநொச்சியிலும் இரங்கற் கூட்டங்கள் நிகழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் முழுவதும் தமிழனுக்காக போர்புரிந்த வீரர்!

## எனது நம்பிக்கையான தோழர்! 'நாகா' பற்றி தமிழரசுத் தந்தை!

''ஜீவியகாலம் முழுவதும் தமிழனுக்காகப் போர் புரிந்தவர் டாக்டர் நாகநாதன்தான். நம்பிக்கையான அந்தத் தோழனை இன்று நான் இழந்துவிட்டேன்.,

—இவ்வாறு தமிழரசுத் தந்தை அவர்கள் டாக்டர் நாகநாதன் மறைவு குறித்து சுதந்திரனுக்கு அளித்த இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தந்தையின் இரங்கற் செய்தி விபரம் வருமாறு:—

''திரு. நாகநாதனைப்பற்றி கூறுவதற்கு பல விஷயங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை மாத்திரம் இங்கு கூறுகிறேன்;

''நாகநாதன் சின்ன வயதிலே யாழ்ப்பாணத்திலும், பின்னர் சென்னையிலும் படித்தார். அவரது தகப்பனார் சென்னை சர்வகலாசாலையில் பதிவாளராக இருந்தார். சென்னையில் ஆங்கிலப் பிள்ளைகளுக்கு என்று இருந்த விசேட கல்லூரியில் நாகநாதன் சேர்ந்து படித்தார். தொடர்ந்து தமது படிப்பை முடிக்க இங்கிலாந்து சென்று அங்கு 'டாக்டர்' ஆகினார்.

'தமது குடும்பத்தின் ஆங்கிலப் பெயரான 'ஹென்ஸ்மன்' என்பதை கைவிட்டு தமது முன்னோர்களின் பெயரான நாகநாதன் என்ற பெயரைத் தமக்குச்சூட்டிக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் ஹென்ஸ்மன் குடும்பம் மிகவும் பெயர் பெற்றது. இந்தக் குடும்பத்திடம் சிறப்பு வாய்ந்த குணதிசயங்கள் பல இருந்தன. இந்தக் குடும்பத்திடம் பரிபூரண நம்பிக்கை வைக்கலாம் என்று மக்கள் கருதினர். ஹென்ஸ்மன் குடும்பத்திடம் இருந்த அத்தனை குணதிசயங்களும் நாகநாதனிடம் இயல்பாகவே அமைந்திருந்தது.

ஹென்ஸ்மன் குடும்பத்தினர் என்றால் மிகவும் தைரியசாலிகள், அநீதியை எதிர்ப்பவர்கள், நீதிக்காகப் போராடுபவர்கள் என்பது யாவரும் ஒத்துக்கொண்ட உண்மை: இந்தக் குணங்கள் யாவும் நாகநாதனிடம் அமைந்திருந்தது.

விளையாட்டிலும் நாகநாதன் வீரராகவே திகழ்ந்தார். இந்தியன் ஜிம்கானா விளையாட்டுக்குழுவிலும், இந்திய ஹொக்கி விளையாட்டுக் குழுவிலும் ஒரு வீரராக நாகநாதன் திகழ்ந்தார். வீரவிளையாட்டான 'றகர்' விளையாட்டிலும் வீரனாக இவர் இருந்தார்;

மொரொக்கோ முஸ்லிம்களுக்காக, ஸ்பானிய—பிரெஞ்சு துருப்புக்களுடன் யுத்தம் செய்து துப்பாக்கிச் சூடுபட்டதுடன், கைதியாகவும் இருந்தவர் நாகநாதன்.

எங்கெங்கு சிறுபான்மையினருக்கு விரோதமாக அநீதி நடக்கிறதோ அங்கெல்லாம் உதவிசெய்ய ஓடிப் போய் நிற்பார் நாகநாதன்.

''இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பியதும் ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் விடுதலைக்கு ம்.ரர டீவண்டி தமிழ் காங்கிரஸை மற்றவர்களுடன் சேர்ந்து தாபித்தார். தமிழ் காங்கிரஸ் எப்பொழுது யுத்த கோலத்தை கைவிட்டதோ அப்பொழுது தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறினார்: தமிழரசு கட்சியை உருவாக்கி வளர்ப்பதில் அதிக அக்கறை காட்டி தமது முழு உழைப்பையும் பயன்படுத்தினார்.



''அவருடைய இயற்கையான சுபாவம், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகஓங்கிகுரல் கொடுப்பது. ஜீவிய காலம் முழுவதும் தமிழனுக்காக போர் புரிந்தவர் அவர்; ஒரு நம்பிக்கையான தோழன்.''

### நாகநாதன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சாவதில்லை' என்று எழுதப்பட்டிருந்தது. ஊர்வலத்தின் முன்னால் பிரமாண்டமான தமிழரசுக் கட்சி கொடியொன்றும் கம்பீரமாக எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்வலத்தில் தேவாரம், திருவாசகம், பட்டினத்தார் பாடல் போன்ற தமிழ் பிரார்த்தனை பாடல்களை பாடிக்கொண்டு பலர் வந்தனர். கத்தோலிக்க கீதங்களும் இசைக்கப் பட்டன. கொழும்பு, வீதிகளில் தமிழ் பாடல்கள் முழங்கிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அல்பிறட் பிளேசிலிருந்து புறப்பட்ட இந்த இறுதி ஊர்வலம், தேஸ்டன் வீதி, இல்பேர்ட் கிறெசென்ட், மெயிற்லண்ட் கிறிசென்ட், ஹோட்டன் பிளேஸ், இன்சி வீதி வழியாக சுமார் மூன்று மைலைக் கடந்து கனத்தை மயானவாயிலையடைந்தது.

மயானத்தில் உள்ள தேவாலயத்தில் பிரார்த்

(11-ம் பக்கம் பார்க்க)

# 'வலது கரத்தை இழந்த போர் வீரன் நிலையில் நான் திகைத்து நிற்கிறேன்'

## டாக்டரின் பிரிவு குறித்து பொதுச்செயலாளர் இரங்கல்!

''தமிழினத்துக்கு நெருக்கடிக்குமேல் நெருக்கடிகளும் இன்னல்களும் நிறைந்த காலகட்டம் இது. தமிழினம் தனது உரிமைகளுக்காகப் போராடியே ஆகவேண்டிய சூழ் நிலை வந்துகொண்டிருக்கிறது. இந்த நெருக்கடி மிகுந்த கட்டத்தில் டாக்டர் நாகநாதன் அவர்களை இழந்தது தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழரசுக்கட்சி நடாத்திய உரிமைப்போராட்டங்களின் போதெல்லாம் எனது வலதுகரமாக விளங்கியவர் டாக்டர் நாகநாதன். அப்பெரியாரை இழந்து இன்று செய்வதறியாது திகைத்து நிற்கிறேன்.''

—இவ்வாறு தமிழரசுக்கட்சிப்பொதுச்செயலாளர் தளபதி அ. அமிர்தலிங்கம் டாக்டர் நாகநாதன் மறைவு குறித்துவிடுத்துள்ள இரங்கற் செய்தியில் கூறியுள்ளார்:

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

''தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகத்தலைவர்களில் நாகநாதனும் ஒருவர். நான் சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த காலம் முதல் டாக்டர் நாகநாதனுக்கும் எனக்கும்நெருங்கியபழக்கம்உண்டு. என் மீது டாக்டர் ஒரு தனியான அன்பையும் பாசத்தையும் சொரிந்து வந்ததை நான் என்றுமே மறக்க முடியாது. டேய் தம்பி, தம்பி என்று என்னை அவர் உரிமையுடன் அழைக்கும் போது அதில் தனியான தோர் பாச உணர்வு கலந்திருக்கும்.

''டாக்டர் அவர்களிடமிருந்த வீர உணர்ச்சியும், தமிழ்பற்றும் அடிமைத்தனத்தை ஏற்கமறுத்து, விடுதலைக்காகப் போராடும் உறுதியான உள்ளமும் கொண்டகொள்கைக்காக உயிரையும் திரணமாக மதித்துப்போராடும் ஆண்மையும் என்னை மிகவும் கவர்ந்தது. நான் அவருடன் நெருங்கிப் பழகியபோது அவரிடமிருந்த மிக உயர்ந்த பண்புகள் பலவற்றைக்கண்டு வியந்திருக்கிறேன்.

முப்பதாண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழினத்துக்காக போராடிய ஈடிணையற்ற தியாகி அவர். அவருக்கிருந்த துணிவும், திறமையும் ஆற்றலும் வேறுயாருக்கும் வர முடியாது. அவர் காட்டிய வழியில் சென்று தமிழ் மக்களுக்கென தமிழரசு அமைப்பதொன்றே தமிழினம் அவருக்குசெய்யக்கூடிய கைமாறாகும்.''



## எண்ணம்

### ஆயிரமாயிரம் நாகநாதன்கள் தோன்றட்டும்!

ஈழத்தமிழினத்தின் சிந்தை, அணு ஒவ்வொன்றிலும் நிறைந்து நின்ற அந்த வீரத்திருவுருவம் வீழ்ந்து விட்டது!

வழிவழியாக வந்த தமிழர்களின் வீரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக — விடுதலை ஆவேசத்தின் பிரதிபிம்பமாக — எழுச்சியின் சின்னமாக — நடமாடிக் கொண்டிருந்த அந்தத் திருமேனி சாய்ந்துவிட்டது!

முப்பதாண்டுகளாக ஈழத்தமிழ் மக்களிடையே புரட்சிகரமான எண்ணங்களையும், சீர்திருத்தக்கருத்துக்களையும், வீர உணர்வையும் விடுதலை வெறியையும் நம்பிக்கையையும் ஊட்டி தமிழ் தேசிய இனத்தை தட்டியெழுப்பிய அந்த வீரபுருஷர் இன்று நம்மிடையே இல்லை!

தமிழ்மக்களின் நண்பனாக, தலைவனாக, தொண்டனாக, போர்வீரனாக, தாயாக வாழ்ந்து தனது கடைசி மூச்சுவரை தொண்டாற்றிய தியாகத்திருவுருவம் போய்விட்டது!

அமரர் வன்னிய சிங்கத்தின் இழப்புக்குப் பின்னர், இயக்கத்திற்கும் இனத்திற்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பு இது; ஈடுசெய்ய முடிதாத நஷ்டம் இது; நிறைவு செய்யமுடியாத இடைவெளி இது!

ஆம், எங்கள் இரும்புமனிதர் — இயக்கத்தின் உயிர்த்துடிப்பு — டாக்டர் இ: மு. வி. நாகநாதன் அவர்களை இழந்து கையறுநிலையில் இன்று தவிக்கின்றோம். ஈழத்தமிழினம் துடித்து அரற்றி அழுகிறது: ஆற்றிவாரில்லை; தேற்றுவாரில்லை!

உயிரைத் தமிழுக்காக அர்ப்பணித்த அந்த உத்தமரின் உடலை, நிலமகள் தனதாக்கித் தழுவிக் கொண்டு விட்டாள்!

முப்பதாண்டுகளாக ஈழத்தமிழினத்துக்காக ஓயாது ஒழியாது உழைத்துக்களைத்த டாக்டரின் திருமேனி ஓய்வெடுப்பதற்காக மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டது!

டாக்டரின் உடல் ஓய்வு கொண்டாலும், அவரது ஆத்மா ஒரு போதுமே ஓய்வு எடுக்காது; அது ஈழத் தமிழினத்தையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கும்; தமிழர்களுக்கு வரும் தீமைகளை அது விரட்டிக் கொண்டேயிருக்கும்; அநீதியை எதிர்த்துப்போராடிக் கொண்டேயிருக்கும்; நமக்கு வழிகாட்டிக்கொண்டேயிருக்கும்; என்று உறுதியாக நம்புகிறோம்.

இரும்பு மனிதரின் ஆத்மா, தமிழினத்துக்கு வேகத்தை, விறுவிறுப்பை, விடுதலைத்தாகத்தை, வீர உணர்ச்சியை, கொடுமைகளை எதிர்த்துப்போராடும் ஆற்றலை, எதையும் தியாகம் செய்யும் மனவைராக்கியத்தை, எப்போழுதும் தந்துகொண்டேயிருக்கப் போகிறது!

நாகநாதனின் பேச்சுக்கள், எழுத்துக்கள் நெருக்கடிமிகுந்தவேளைகளில் அவர் காட்டிய வீரதீரம், துணிவு, போன்ற குணதிசயங்கள்—தமிழினத்துக்கு குன்றின் மேலிட்ட தீபமென வழி காட்டிக்கொண்டிருக்கின்றன:


போர்க்களத்தில் படைவீரன் ஒருவன் வீழ்ந்து விட்டால், ஒருமுறை திரும்பி ஓர் அனுதாபப்பார்வையை அவன் மீது செலுத்தி விட்டு மேற்கொண்டு போராட்டப்பாதையிலே விரைந்து ஏனைய வீரர்கள் முன்னேறிச் செல்வதையே, வீழ்ந்து விட்டபோர் வீரன் விரும்புவான். கண்கலங்கி கோழைகள்போல கதறியழுவதை அவன் விரும்பவே மாட்டான்.

அதே போல டாக்டர் நாகநாதன் அவர்களும் ஒரு சிறந்த போர் வீரர். நமது போராட்டப் பாதையிலே, வன்னியசிங்கம், ஏகாம்பரம், இராசவரோதயம், திருமலை நடராசன், வி. ஏ. கந்தையா போன்ற பல வீரர்களை இழந்துவிட்டோம். இறுதியாக அந்த வரிசையிலே டாக்டரையும் இன்று பறிகொடுத்துவிட்டோம்: டாக்டரின் தன்னலமற்ற தியாகத்தையும், குணதிசயங்களையும், எண்ணிப் பார்த்து, கண்களைத் துடைத்துக்கொண்டு, இன விடுதலை என்ற நமது இலட்சியப்பாதையிலே முன்னேறுவோம். இதையே டாக்டரின் ஆத்மா ஆவலோடு எதிர்பார்க்கும் என்பதில் ஐயமில்லை.

ஆம், கடந்த முப்பதாண்டுகளாக ஈழத் தமிழ் நாட்டில் டாக்டர் நாகநாதன் விதைத்த வீர உணர்ச்சி, தியாகம், துணிவு, அநீதியை எதிர்த்து எதுவரினும் போராடும் ஆற்றல் — ஆகிய விதைகளிலிருந்து, ஆயிரமாயிரம் நாகநாதன்கள் தோன்றட்டும்; தமிழினத்தின் அடிமை விலங்கு சட சடவென முறியட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டரிடம் யாசிக்கிறேன்!



அன்பு நண்பா,

எழுதிட கைகள் நடுங்குகின்றன; இதயம் வெடித்துத் தூள் தூளாகி விடுவதுபோன்றதோர் உணர்வு; எண்ணங்கள் செயலற்று விடுகின்றன: கண்களோ அழுதழுது காய்ந்துவிட்டன; இனி கண்ணீரில்லை அதனிடம் அழுவதற்கு! உன்னிடம் எதைக் கூறுவதென்று திகைத்திடுகிறேன்,

ஆம் நண்பா, இந்தக்கிழமை வங்கநாட்டின் சிங்கத் தலைவன் முஜிபுர் ரகிமானைப் பற்றியெழுதிட இருந்த நேரத்தில் நமது விடுதலைச் சிங்கம் வீழ்ந்தது என்ற வேதனை நிறைந்த செய்தியன்றோ எனக்குக் கிடைத்திட்டது! இரும்பு மனிதர் இறந்திட்டார் எனும் சேதி கேட்டபோது இரும்புதனைக் காய்ச்சி இரு செவியிலூற்றியதுபோலன்றோதுடித்திட்டேன்; நான் மட்டுமென்ன தமிழ்க் குலம் முழுவதுமே துடித்துக் கதறியழுகிறது!

நாகநாதன் இறந்தார் எனும் சேதி வருவதற்கு இருநாட்களுக்குமுன்னர் அவரைப் பார்த்துவிட்டு வந்த சில நண்பர்கள் கூறியிருந்த சேதி சிறிது நம்பிக்கையூட்டுவதாக இருந்தது; நமது வேண்டுகோள் பலித்துவிடும்; டாக்டர் பிழைத்துவிடுவார் என்று எத்துணை ஆவலோடு காத்திருந்தேன், ஆனால் என் எண்ணத்திலே மண் விழுந்தது: தமிழினத்தின் இதயத்திலே இடி விழுந்தது!

நல்லவர்களின் உயிரைப் பறித்துவிட்டு மக்கள் கதறித்துடித்து அழுவதனைப் பார்த்திடுவதில் இறைவனுக்கு அளவிலா ஆனந்தம்போலும்! இது அவனுக்கு ஒரு வேடிக்கைபோலும்! அதனால்தான் நம் இதயம் நிறைந்த இனிய தலைவரை இன்று நம்மிடமிருந்து எடுத்துக்கொண்டு நம்மை அழவைத்து ஆனந்தப்படுகிறான்!

நண்பா, நமது டாக்டரிடமிருந்து அவரது உயிரைச் சுலபத்தில் பறித்திட காலதேவனால் முடிந்திடவில்லையென்பதையும், அவருடன் கடுஞ்சமர் ஆற்றியபின்பே அதை அபகரித்திட முடிந்ததென்பதையும் உனக்கு சுட்டிக்காட்டிட வேண்டும்.

ஆம், டாக்டர் நாகநாதன் நமது உரிமைப் பாதுகாவலரன்றோ; தமிழினத்தின் ஜீவாதார உரிமைகளுக்காக—தமிழ்மொழியின் வாழ்வுக்காக—உரிமைப் போராட்டங்கள் பல நடத்தியவரன்றோ; எந்த இனத்தினதும் சரி, தனி மனிதனதும் சரி, அடிப்படை உரிமைகள் பறிக்கப்படக் கூடாதென்பதன்றோ டாக்டரின் இலட்சியம்; அப்படிப்பட்ட வீரபுருஷரான டாக்டர், தமது உயிரை காலனிடம் சுலபத்தில் கையளித்துவிடுவாரா?

இயல்பாகவே போராடும் சுபாவமும், நீதி ஒன்றைத் தவிர வேறு எதற்கும் தலைவணங்கா ஆண்மையும் நிரம்பிடப் பெற்ற டாக்டரிடமிருந்து அவரது உயிரை எடுத்துக்கொள்வதற்காக எட்டு நாட்களுக்கு மேலாக காலதேவனால் போராட வேண்டியிருந்தது என்றால், நமது இரும்பு மனிதர் எவ்வளவு தூரம் இறுதிக் கட்டத்திலும் விடாப்பிடியாக நின்று தன்னந்தனியாக எதிர்ப்பு போர் நடத்தியிருக்கிறார் என்பதனைப் புரிந்துகொள்ளலாமே!

ஆனால் நான் நம்புகிறேன் நண்பா—நிச்சயம் நமது டாக்டரிடம் காலதேவன் படுதோல்வியடைந்திருப்பான்; எப்படியும் டாக்டரின் உயிரைப் பறித்திடுவதிலே அக்கறை காட்டிய அவன், போராட்டத்தில் இறுதியாக தோல்வியடைந்ததும், டாக்டரின் காலில் வீழ்ந்து கதறி அவரது உயிரைப் பிச்சையாகத் தந்துவிடும்படி இரந்து கேட்டிருப்பான்; எவ்வளவு தூரம் நமது டாக்டர் உரிமைப் போராட்ட வீரரோ அதே போல கருணை வள்ளல் என்பதும் உனக்குத் தெரிந்திருக்குமே; காலில் விழுந்து கெஞ்சுவோர்க்கு தன்னையும் தந்திடும் தலை சிறந்த வள்ளலன்றோ நம் டாக்டர்; காலதேவனின் கண்ணீர் டாக்டரின் இதயத்தை கரைத்திருக்கும்; அதனால் எடுத்துக்கொள் எனது உயிரை என்று தாமாகவே தமது உயிரை காலதேவனிடம் பிச்சையாகப்போட்டிருப்பாரென்றே நான் நம்புகிறேன்.

எப்படியோ நண்பா, நாமெல்லாம் நமக்கோர் கொழுகொம்பு என்று நம்பிக்கொண்டிருந்த எங்கள் நாகநாதன் எங்களைவிட்டு போய் விட்டார்! ஐயகோ! ஏன்தான் இந்த முடிவுக்கு வந்தாரோ எங்கள் இரும்பு மனிதர்?

முப்பதாண்டுகளுக்குமேலாக, முடங்கிக் கிடந்திடும் ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக—ஈழத்தமிழ் நாட்டின் அடிமைக் கயிறு அறுவதற்காக—அல்லும் பகலும் அயராது போராடினேனே; காடுமேடெங்கும் நாடு நகரெங்கும் சுற்றித்திரிந்து தமிழினத்துக்கு எழுச்சியை ஏற்படுத்தினேனே; உணர்ச்சியை கட்டி வளர்த்தேனே; இதனால் என் வாழ்வையும் வருவாயையும் இழந்தேனே; எத்தனையோ போராட்டங்களில் கலந்துகொண்டு உயிரைப் பணயம் வைத்து உரிமைக்குப்போராடினேனே; எல்லாவற்றையும் மறந்து—நன்றிகெட்டு 1970 தேர்தலிலே தமிழ் மக்கள் என்னைத் தோற்கடித்து ஒரு தமிழ்த்துரோகியை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவிட்டார்களே; என்ற விரக்தியினால் எங்களை விட்டுச்சென்றாரோ நாகநாதன்?

இருக்காது; இருக்காது; பதவியைக் குறிக்கோளாக வைத்து செயல் பட்டவர் அல்லர் அந்த உத்தமர்; பதவியையும் தமிழினத்தின் விடுதலைக்குப்போராடுவதற்குரிய ஓர் கருவியாகவே பயன்படுத்தியவர் அவர்; மக்களுக்காக உண்மையுடன் போராடுபவர்களை—இலட்சியவாதிகளை—மக்களே சில சமயங்களில் நிராகரித்து விடும் அவர்களது அறியாமையை—அரசியல் தெளிவின்மையை—எண்ணி எண்ணி மனமுடைந்தாரே தவிர மக்களை அவர் எந்தக் காலத்திலுமே வெறுக்காத உயர்குணம் படைத்தவர்.

தேர்தலில் வென்றால்தான் மக்கள் சேவை; தேர்தலில் தோற்றால் மக்களிடமிருந்து ஒடி ஒதுங்குவது; என்ற தத்துவத்தினை பின் பற்றிடும் தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர் ஈழத்

## அரசியல் மேடை

தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். ஆனால் நாகநாதன் அவர்களோ, தேர்தல் வெற்றி தோல்விகளில் அக்கறை காட்டுவதில்லை; வென்றாலும், தோற்றாலும் மக்கள் பணியொன்றே தமது இலட்சியமாகக்கொண்டு செயல்பட்டவர்; இத்தகைய மக்கள் தொண்டரை இனி நாம் என்று காணப்போகிறோம்?

முப்பதாண்டுகளுக்குமேலாக தமிழினத்தின் மத்தியில் விடுதலை உணர்வை விதைத்தேனே; கொள்கை மறவர்களாக—கட்டுப்பாடு நிறைந்த வீர இனமாக தமிழினத்தை மாற்றியமைத்திட இரவுபகலாக உழைத்து என்னையே அர்ப்பணித்தேனே; ஆயினும் ஈழத்தமிழினத்துக்கு இன்னும் வேகம் பிறந்திடவில்லையே; அடிமை உணர்ச்சி அகன்றிடவில்லையே; சுதந்திரத்தையும் சொந்த ஆட்சியையும் மீண்டும் அமைத்திடவேண்டுமென்ற விடுதலை வெறி முழுத்தமிழினத்தையும் இன்னும் பற்றிப் பிடிக்கவில்லையே; வர வர, துரோகிகளும், எட்டப்பர்களும், எச்சில் இலை நக்குவோரும் பதவிப் பித்தர்களுமன்றோ தமிழினத்தின் மத்தியில் அதிகரித்து வருகிறார்கள்; இந்த இனம் எப்படி வாழப்போகிறது; எப்படி அழிவிலிருந்து மீளப்போகிறது; எப்படி சுதந்திரம் அடையப்போகிறது; என்றெல்லாம் எண்ணி உள்ளம் உடைந்து—ஈழத்தமிழ் நாட்டின் பரிதாப நிலையை அமரர் வன்னியசிங்கம், கந்தையா இராசவரோதயம், ஏகாம்பரம் போன்றோரிடம் எடுத்துரைத்திடுவோம் என்று வானுலகு நோக்கிச் சென்றனையோ ஐயா!

எதுவந்தாலும் — எத்தகைய இன்னல் நேர்ந்தாலும் — எதற்கும் அஞ்சிடத்தேவையில்லை; எங்கள் அஞ்சாநெஞ்சன் நாகநாதன் அருகினிலே எங்களுடனேயே இருக்கும்போது; என்று எண்ணி எண்ணி இறுமாப்புக் கொண்டிருந்தோமே; இனி எங்கள் கதியென்ன என்று கதறியழும் இயக்கத் தோழர்களுக்கு என்ன ஆறுதலைக்கூறிட முடியும்?

ஈழத்தமிழ் நாட்டில் அவன் கால்படாத இடமில்லையெனும்படி பட்டி தொட்டியெங்கும் புகுந்து, தனது காம்பீரியம் மிக்க குரலெடுத்து சோர்ந்து போய்க்கிடக்கும் தமிழ் மக்களுக்கு விடுதலை வெறியையும் தன்னம்பிக்கையையும் ஊட்டுவானே அந்தக்காட்சியை இனி என்று காண்போம்?

நாம் தமிழர்கள்; நாம் யாருக்கும் அடிமைகளல்லர்; ஈழத்தமிழ்நாடு எங்கள் திருநாடு; இந்த நாட்டின் சொந்தக்காரர்கள் நாம்; எங்கள் தமிழ்க்கொடி இந்த நாட்டில் பறந்தது அன்றொருநாள்; கோட்டை கட்டி கொத்தளம் அமைத்து—தனியரசு நடாத்தி தலைநிமிர்ந்து வாழ்ந்தவர்கள் நம்முன்னோர்; நல்லூரிலுள்ள சங்கிலித்தோப்பு நாம வாழ்ந்த கதையையும் வீழ்ந்த கதையையும் கூறும் வரலாற்றுப்பெட்டகம்; ஆம், நாம் ஆண்டபரம்பரையினர்; மீண்டும் நாம் அந்த நிலையை அடைந்திடவேண்டும்; தமிழரசை அமைத்திடவேண்டும்; இதற்கு அஞ்சாநெஞ்சுடன் முன்வந்து இரத்தம், வியர்வை, கண்ணீர் என்ற மூன்றினையும் சிந்திடவேண்டும்; இதற்குத்தயாரான பொங்கு தமிழ் இளைஞர்களே; தமிழரசுக்கட்சியில் சேர்வீர்; என்பின்னால் வாரீர்; என்று மேடைகளில் நின்று இத்தாலிநாட்டு கரிபால்டிபோல வீரக்குரலெடுத்து முழங்குவானே... அந்த எழுச்சி நாதத்தை இனி என்று கேட்போம்?

டாக்டரிடம் போனால் இந்தக்காரியம் ஆகும்; நியாயமான காரியங்களுக்காக எந்த இடத்திலும் துணிச்சலாகப் புகுந்து வாதாடக் கூடிய அவர்; எவ்வளவு பெரிய மனிதர்களானாலும் அவர்களுடன் முன்னின்று சண்டை போடக்கூடிய ஒரே ஆற்றல் மறவர் எமது டாக்டர்; என்கின்ற நம்பிக்கையுடன், உன்னைக் காண்பதற்கு தினம் தினம் உன் வீட்டிற்கு தமிழ் மக்கள் 'படை' யெடுத்து வருவரே; உன்னை நம்பிவரும் அம்மக்களுடன் குதூகலமாகப் பேசியும், செல்லத்துடன் அவர்களுக்கு தட்டிக்கொடுத்தும், அன்புடன் 'குத்து' விட்டும், சுறுசுறுப்புடன் பணிபுரிவாயே; டாக்டர் ஐயா, அந்த இனிய காட்சிதனை இனி என்று காண்போம்; தாயினும் நல்ல தலைவனன்றோ நீ!

மூன்று, இரண்டு, ஆறு, இரண்டு, எட்டு—என்ற அந்த தொலைபேசி இலக்கத்தைச் சுழற்றியவுடன் மறுகரையிலிருந்து 'டொக்டர் நாகநாதன்' என்ற கணீரென்ற குரல் வருமே, அந்தக் குரலை இனி எப்படிக்கேட்போம்?

தமிழரசுக்கட்சி நடத்தும் தமிழின உரிமைப் போராட்டங்களிலெல்லாம் மத்தகஜம் போல் முன்னணி வகித்து — களத்திலே போராட்ட வீரர்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் ஊட்டியபடி சங்ககாலத்துத் தமிழ் வீரன் போல் உலாவருவானே! அந்த எழுச்சி மிகு காட்சிதனை—புறநானூற்று மாட்சிதனை—இனி என்று காண்போம்!

1961ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது—போராட்டத்திற்கு எதிராக மக்களைத்திருப்பிவிடும் சூழ்ச்சி திட்டத்துடன், யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த உணவுப் பண்டங்கள் கொண்ட ரயிலை, உணவுப்பண்டங்களை இறக்காமல் அப்படியே திருப்பி கொழும்புக்கு அனுப்ப அரசு முயற்சித்த சமயத்தில்—தண்டவாளத்தின் குறுக்கே தலைவைத்துப்படுத்து அந்த முயற்சியை உடைத்தெறிந்தாரே எங்கள் நாகநாதன். அத்தகைய வீர சாகசச் செயல்களில் ஈடுபடக் கூடியவர்கள் இனியார் இருக்கிறார்கள்?

நண்பா, நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு, மகேசனை வரச்சொல்: மகேசனை வரச்சொல்; என்று சில நண்பர்களிடம் சொல்லியனுப்பியிருந்தார் டாக்டர்; என்னோடு கூட தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, தம்மை வந்து சந்திக்கும்படியும் அரசியல் பிரச்சினைகளையிட்டு நிறையப் பேசவேண்டு

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிப் பிரச்சினைக்கு கௌரவ தீர்வுகண்டிட தமிழரசுக் கட்சிமேற்கொண்ட முயற்சிகள்

இந்த மொழிப் பிரச்சினையின் சரித்திரத்தை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டை, அந்நியர் கைப்பற்ற முன்னர் மூன்று அரசர்கள் அரசாண்டார்கள். இலங்கையின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் தமிழ் மன்னரும், கோட்டேப் பிரதேசத்திலும், கண்டிப் பகுதியிலும் சிங்கள மன்னரும் அரசோச்சினர்கள். இந்த மன்னர்கள் தங்கள் சபைகளிலே என்ன என்ன மொழிகளைப் பாவித்தார்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

### அரசோச்சிய தமிழ்!

வடபகுதி இராச்சியத்தில் தமிழ் அரசோச்சியது என்பதை எவரும் மறுக்கமுடியாது. கோட்டை, கண்டி இராசதானிகளில் சிங்களம் இருந்தது. அதே நேரத்தில் இராசதானிகளில் தமிழுக்கும் இடம் இருந்தது. கண்டிய சாசனத்தில் தமிழ் மொழியிலும் கையொப்பம் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கையில் கண்டி மன்னன் சபையில் தமிழையும் பாவித்தார்கள் என்று தெரிகிறது. ஆகையால், இந்த நாட்டின் சரித்திரத்தில் அரச மொழியாக, ஆட்சி மொழியாக தமிழும் சிங்களமும் சரித்திரகாலம்தொடக்கம் இருந்து வந்திருக்கின்றன என்பதை எவரும்மறுக்க முடியாது.

1833 ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் ஒரு ஆட்சியின் கீழே ஆங்கிலேயரால் ஆளப்பட்டநேரத்திலே தான் முதன் முதலாக நாடு முழுவதும் ஆங்கிலம் அரசகரும மொழியானது. அதற்கு சிங்களமும் தமிழும் தாம் ஆட்சி மொழிகளாக இருந்தன. ஆங்கிலத்தைப் பலாத்காரமாக அவர்கள் எங்கள் மீது திணித்தார்கள். அதனுல் சிங்களமும் தமிழும் அரசகரும மொழியின் அந்தஸ்தை இழந்தன. இன்று ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறி விட்டார்கள். நாம் இன்று அடிமைகளாக இல்லை. இந்த நிலையிலே இந்த நாட்டை என்ன மொழியில் ஆள்வது என்பதுதான் பிரச்சினை.

இன்று நாட்டிலுள்ள பெரிய பிரச்சினை உங்களுடைய மொழி மட்டும்தான் அதாவது பெரும்பான்மை மக்களுடைய மொழி மட்டும் தான் இருக்கவேண்டுமா அல்லது தமிழ்மொழியும் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமா என்பது தான்.

### சிங்களமும் தமிழும்

மனச்சாட்சி உடையவர்கள், நியாயம் நீதியை வழங்க நினைப்பவர்கள் என்ன செய்வார்கள் என்பதை தான் உங்களையேகேட்கவிரும்புகிறேன். இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண வேண்டுமென்று 1944 ஆம் ஆண்டில், அதாவது நாம் சுதந்திரம் அடைய முன்னரே ஆலோசிக்கப்பட்டது. இந்த நாட்டை அந்நியர் மொழியில் ஆளக்கூடாது, இந்த நாட்டு மக்களுடைய மொழியில்தான் ஆளவேண்டுமென்று கருதி அன்று இருந்த சட்ட சபையினர் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்தனர். அவர்கள் கண்ட முடிவு என்ன? இந்த நாட்டின் அரசகரும மொழியாக சிங்களம் மட்டும் இருக்கக்கூடாது என்று அவர்கள் தீர்மானித்தார்கள். சிங்களம் மட்டும் பிரேரணையைத் திருத்தி அமைத்து இந்த நாட்டின் அரசகரும மொழியாக சிங்களமும் தமிழும் இருக்கவேண்டும் என்று 1944இல் தீர்த்தார்கள்.

காலஞ்சென்ற கௌரவ பண்டாரநாயக்க அவர்கள் அப்பொழுது அமைச்சரவையிலே ஒரு முக்கிய அமைச்சராக இருந்தார். அவரும் சேர்ந்து தீர்த்த ஒரு விஷயம் இது அந்த நேரத்தில் பெரும் அரசியல் பதவிகளைப்பற்றி அன்று அரசியல் வாதிகள் நினைக்கவில்லை. நியாயமும் நீதியும் வழங்கவேண்டும்; நீதியின்படிதான் நடக்க

கத்தான் சிங்கள மகா சபை ஆரம்பிக்கப்பட்டது. அப்படிப்பட்ட சிங்கள மகாசபை கூட தனது மொழிக்கொள்கையைத் தனிச்சிங்களமாக வைத்திருக்கவில்லை. என்பதை நாம் மறுக்கக்கூடாது. சிங்கள மகாசபை கூட இந்த நாட்டினுடைய அரசமொழிகள் தமிழும் சிங்களமுமாக இருக்கவேண்டும் என்று நினைத்தது; அதற்காக உழைத்தது.

வேறு எந்தக் காரணத்துக்காக அரசியல் கட்சிகள் தங்களுடைய கொள்கையை

அந்தச் சட்டத்தை நாம் அப்போதும் ஏற்கவில்லை; இப்போதும் ஏற்கவில்லை. ஆனுல், நிர்ப்பந்தத்தின்கீழ் நாம் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் வாழ வேண்டி ஏற்பட்டது.

### பிரச்சினை தீர பேச்சுவார்த்தை

நாம் சமாதானமாகப்பேசி இந்த மொழிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக 1960 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தினேம்.

கொண்ட கௌரவ காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம் அவர்கள், அப்போது நடந்த பேச்சு வார்த்தைகள் பற்றிய தெளிவான ஒரு பேச்சை நிகழ்த்தினர்கள். அதைத் தொடர்ந்து இன்றைய பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரான கௌரவ பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள் அதற்குப் பதிலாக ஒரு பேச்சை நிகழ்த்தினர்கள்.

### மாவட்ட சபை

அவ்விதம் பதில் கூறிய நேரத்தில் கருத்து வித்தியாசங்கள் ஏற்பட்டன. அதை நிவிர்த்திக்க அந்த விவாதத்தில் மீண்டும் ஒரு முறை காங்கேசன்துறைப் பிரதிநிதி அவர்கள் குறுக்கிட்டு ஓர் உரை நிகழ்த்தினர்கள் அவர்கள் குறிப்பிட்டது என்னவென்றுல்,

"In regard to point 3, in regerd to citizenship, it was rejected by the S, L. F. P."

பிரஜா உரிமை பற்றிக் கவனிக்க முடியாதென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறுத்து விட்டது.

"In recard to nomination of candidetes to represent the estate Tamil poputation, the S.L.F.P. consented to nominate to two and not four of the six Appointed seats in Parliament."

பிரதிநிதிகள் சபைக்கு நியமிக்கப்படும் ஆறு நியமன அங்கத்தவர்களில் நான்கு பேரை மலைநாட்டுத் தமிழர்கள் சார்பில் நியமிக்கும்படி கேட்டோம். அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, "நான்கு பேரை நியமிக்க முடியாது இரண்டு பேரை நியமிக்கிறேம்" என்று கூறியது தோட்டப்பகுதிகளிலே.

"In regard to regional councils, the S. L. F. P. did not want to enter into any agreement as such but said that their intention was to bring about legislation to create District Councils."

மாவட்ட சபைகளைப் பொறுத்த அளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்முடன் ஒப்பந்தத்தை எழுத விரும்பவில்லையென்றும் ஆனுல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினுடைய கொள்கை மாகாண சபைகள் அல்ல, மாவட்ட சபைகளை ஆரம்பிப்பதுதானென்றும், ஒரு ஒப்பந்தத்தை எழுதாது விட்டாலும் நாங்கள் மாவட்ட சபைகளை அமைக்கத்தான் போகிறேம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எமக்குக் கூறியது.

"In regard to language, the S. L. F. P. did not enter into any agreement as such but said that the intention was to more or less carry out what the F. P. wanted,"

காங்கேசன்துறைப் பிரதிநிதி அவர்கள் எங்கள் கோரிக்கைகள் என்ன என்பதை எடுத்துக் கூறி அதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கூறிய மறுமொழியையும் ஒரு சமயம் பாராளுமன்றத்தில் வாசித்தபோது கௌரவ பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்கா அவர்கள் கௌரவ காங்கேசன்துறைத் தொகுதி அங்கத்தவரைப் பார்த்து இதைக் கூறினர்.

"We are not at issue. We are not saying two different

(10ம் பக்கம் பார்க்க)

## சிங்கள தலைவர்களின் நேர்மையின்மையால் அவை நிறைவேருமல் போன வரலாறு!

வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அன்று அரசியல் வாதிகள் நடந்தார்கள். அதனுலேதான் 1944 ஆம் ஆண்டிலே தீர்த்தார்கள், இந்த நாட்டின் அரச கருமமொழி தமிழும் சிங்களமுமாக இருக்கவேண்டும் என்று.

### சிங்கள மகாசபை

1944 ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கையிலே பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.



அன்று நாம் பூரண சுதந்திரத்தோடு இந்த நாட்டில் வாழவில்லை. 1948ஆம் ஆண்டிலிருந்து பூரண சுதந்திரத்தோடு இந்த நாட்டிலேவாழ்கிறேம். இலங்கைக்கு பூரண சுதந்திரம் 1948 ஆம் ஆண்டில் கிடைத்தது. அந்த நேரத்திற்கூட எந்த ஒரு அரசியல்வாதியாவது தனிச் சிங்களம்தான் இந்த நாட்டின் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்று நினைக்கவில்லை, எண்ணவும் இல்லை.

மாற்றியதோ நமக்குத்தெரியாது. அதைப்பற்றி இங்கே ஆராயவேண்டிய தேவையும் இல்லை.

### தனிச் சிங்களச் சட்டம்

திடீரென்று 1955ஆம் ஆண்டு அன்றுள்ள அரசியல் கட்சிகளிலே அரசாங்கத்தைக் கைப்பற்றலாம் என்று நினைத்த அரசியற்கட்சிகள் தங்களுடைய கொள்கையை மாற்றின. ஐக்கியதேசியக் கட்சி மாற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாற்றியது. 1956ஆம் ஆண்டிலே தனிச் சிங்களச்சட்டம் பெரும் கலவரத்தின் மத்தியிலே, சிறுபான்மை மக்களுடைய பெரும் எதிர்ப்பின் மத்தியிலே பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பேசினேம். மொழிப் பிரச்சினையையும் மற்றப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும், இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களும் பெரும்பான்மை இனமும் ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்று இரண்டு அரசியற் கட்சிகளிடமும் கூறினேம்.

அந்நேரத்தில் ஐக்கிய தேசியக்கட்சியிடம் நாம் எதைக் கேட்டோம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் எதைக் கேட்டோம், அதற்கு அவர்கள் என்ன பதில்தந் தார்கள் என்பதை ஞாபகப்படுத்த வேண்டும். அவற்றை ஞாப

## அரசியல் நிர்ணயசபையில் எடுத்துரைத்தார் தர்மலிங்கம்!

அந்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு காலஞ்சென்ற கௌரவ பண்டாரநாயக்க லண்டன் மாநகரத்தில் இருக்கும்பொழுது கூறினுர், இலங்கையிலே மொழிப் பிரச்சினையைத் தீர்த்து விட்டோம் என்று. தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றி விட்டோம். இனி, மொழிப் பிரச்சினை இலங்கையில் இருக்கமுடியாது என்று கூறினுர்.

ஒரு சட்டத்தினுலே ஒரு பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை கௌரவ பண்டாரநாயக்கவின்

கப்படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையை இப்போது தீர்ப்பது சுலபமாக இருக்கும். ஹன்சாட், தொகுதி 45ஐப் பார்க்கும்போழுது, அன்றைய அவசரகால நிலையைப்பற்றிய பிரதிநிதிகள் சபையில் விவாதம் நடந்த சமயம் ஐக்கிய தேசியக்கட்சியோடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோடும் நாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி அறியக்கூடியதாக இருக்கின்றது.

1960ஆம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் இரண்டு அரசியற் கட்சிகளும் அரசாங்கத்தை அமைக்க அதனதனேடு ஒத்துழைக்கும்படி எங்

## 'தமிழ்மொழிச்சட்டத்தை நாம் ஏற்கவில்லை; நிர்ப்பந்தத்தினுல் அச்சட்டத்தின்கீழ் வாழுகிறேம்!'

ஐக்கிய தேசியக்கட்சி என்ருலும் சரி, சிங்கள மகா சபா என்ருலும் சரி, எந்த ஒரு அரசியல் கட்சியாவது சுதந்திரம் கிடைத்த நேரத்தில் இந்த நாட்டினுடைய அரசகரும மொழி ஒரேயொரு—மொழியாக—பெரும்பான்மை மக்களுடைய மொழியாக இருக்க வேண்டும் என்று நினைக்கவில்லை.

சிங்கள மகா சபை ஆரம்பித்த நேரத்திலே இந்த நாட்டிலே வாழும் சிங்கள மக்களை ஒற்றுமைப் படுத்த வேண்டும். இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களுடைய முன்னேற்றத்தை பொருளாதார; கலை, கலாசாரத்துறைகளிலே முன்னுக்குக்கொண்டு வரவேண்டும் என்பதற்கா

காலத்துக்குப் பின் நடந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டின. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டபொழுது பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைத்த அதே பண்டாரநாயக்கதான் 1958 ஆம் ஆண்டிலே தமிழ் உபயோகச் சட்டத்தையும் நிறைவேற்ற வேண்டியிருந்தது. தனியொரு மொழியினுலே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது என்று அவருடைய மனச்சாட்சியே அவருக்குக் கூறியது. ஆதலால்தான் இதற்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்று கருதி, எங்கள் ஆதரவைக்கொடுக்க மறுத்து நாம் பாராளுமன்றத்தில் இல்லாதபோது தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தை நிறைவேற்றினர்கள்.

களைக் கேட்டன. நாம் இரண்டு அரசியற் கட்சிகளையும் சந்தித்து, "எங்கள் கோரிக்கைகள் இவை, இவற்றை நிறைவேற்ற யார் முன் வருகின்ருர்களோ அவர்களுடன் சேர்ந்து நாம் ஒத்துழைக்கத் தயார், அரசாங்கத்தை அமைக்கத் தயார்" என்று சொன்னேம். ஐக்கியதேசியக் கட்சியிடம் கேட்ட அதே கோரிக்கைகளைத்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமும் கேட்டோம் என்பதைச் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

சுருக்கமாகக் கூறினுல் நான்கு அம்சங்களை அடிப்படையாக வைத்து நாம் அந்தக் கோரிக்கைகளைக் கேட்டிருந்தோம். அப்போது அந்த விவாதத்திலே கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மலைமகன்,
மாத்தளை.

கே: மலையகமக்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்த, அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற மலையகத்தில் தமிழரசுக்கட்சி கிளைகளை நிறுவினுல் என்ன?

ப: இதே கேள்வியைத்தான் நானும் உங்களுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சியிடம் கேட்கிறேன்!

கே: மலையகத் தமிழர்களுக்கு கைகொடுப்பதற்கு வடக்கு, கிழக்கு தமிழர்கள் தயாராக இருக்கிருர்களா?

ப: எந்த நிமிடத்திலும், எந்தசந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கிருர்கள்!

ஃ

செல்வி.
இந்திராணி கந்தையா,
யா/இ.ம. கல்லூரி.

கே: ஆனந்தசங்கரி இருக்கும் பதவியில் திரு. ஆலாலசுந்தரம் இருந்தால் கிளிநொச்சித் தொகுதியின் இன்றைய நிலை எப்படி இருக்கும்?

ப: தமிழினத்தின் மானத்தை காத்த பெருமையில் கிளிநொச்சி இன்று முன்னேடியாக திகழ்ந்திருக்கும்!

ஃ

என். எஸ். ராஜா,
ஆனைக்கோட்டை.

கே: காவடித் தியாகராசா கதிர்காமக் கந்தனுக்கும் காவடி எடுப்பாரா?

ப: மாட்டார்: இப்போது அமைச்சர்களுக்கு காவடி எடுப்பதற்கே அவருக்கு நேரம் போதவில்லையாம்! இதில் கதிர்காமக்கந்தனுக்கு வேறு காவடியா?

கே: நீங்கள் ஆத்திகவாதியா, நாத்திகவாதியா?

ப: இரண்டு மல்ல—பகுத்தறிவுவாதி!

கே: கடவுளை மனிதன் படைத்தானு? அல்லது மனிதனைக் கடவுள் படைத்தானு?

ப: கடவுள் மனிதனைப் படைத்தாரென்கின்றனர் மதவாதிகள். ஆனுல் மனிதர்களே கடவுளைப்படைக்கின்றனர் இப்போது! ஏ. பி. நாகராசனின் புராணப் படங்களில் மனிதர்களே கடவுள்களாகவும் வருவதை காணவில்லையா?

ஃ

த. துரைசிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: சண்டியரையும் கோமாளிகளையும் கூத்தாடிகளையும் மாநகரசபையிலிருந்து துரத்துவதற்கு இவ்வருட இறுதியில் நமக்கு சந்தர்ப்பம் கிடைக்குமா?

ப: கிடைக்கும் சந்தர்ப்பத்தை எதிர்காலத்திலாவது சரியாகப்பயன்படுத்திக் கொள்வீர்களா?

ஃ

க. கிருஷ்ணனந்தன்,
பருத்தித்துறை.

கே: மாரீட்டினின் துரோகத்திற்கு நாம் என்ன செய்யலாம்?

ப: தமிழ்ச் சாதியின் தலைவிதியை எண்ணி எண்ணி வேதனைப்படலாம்!

ஃ

பி. ஆர். ஐ.,
கற்கோட்டை,

கே: சமயத்திற்கா மொழிக்கா முதலிடம் அளிக்கப்பட வேண்டும்?

ப: சமயத்தைவிட மொழியே முதன்மையானது என்பதை அண்மையில் நிலைநாட்டி விட்டனர் கிழக்கு வங்காள மூஸ்லிம் மக்கள்!

ஃ

செல்வி:
இந்திராணி முத்தையா,
கிளிநொச்சி.

கே: தி. மு: க: கடவுளை மதிப்பதில்லையென்று சிலர் கூறுகிருர்களே... இது உண்மையா?

ப: கடவுளை மதிக்காதவர்களாக தி. மு. க. வினர் இருந்தால், ஓடாத திருவாரூர் தேரை ஓட வைத்திருப்பார்களா தமது ஆட்சியில்?

கே: கிளிநொச்சி பா: உ: ஆனந்தசங்கரியின் கொள்கை என்னவென்று கூறுவீர்களா?

ப: பச்சோந்தியின் நிறம் என்ன என்று நீங்கள் கூறுவீர்களா?

ஃ

பொ: கலைச்செல்வி,
ஏழாலை.

கே: 2—8—71 வீரகேசரி வாசித்தீர்களா? தி. மு: க: அரசாங்கம் இந்து ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை முறையை கொண்டு வந்ததை தாக்கி அதில் எழுதப்பட்டிருக்கிறதே?

ப: வாசித்தேன். தமிழுக்கு பெருமைதரும் எந்தக் காரியத்தை தி: மு. க. அரசு செய்தாலும் அதைத்தாக்குவதற்கென்றே தமிழ் துரோகக் கும்பல் ஒன்று வாழுகிறது. அந்தக் கும்பலில் வீரகேசரியும் ஒன்று அவ்வளவுதான்!

ஃ

ஈழமாறன்
கொழும்பு-13

கே: தமிழர் சுயாட்சிக் கழகம் ஈழத்தமிழர்களுக்கு தனிநாடு கேட்கிறதா?

ப: இல்லை. அவர்கள் கேட்பது ஈழத்தமிழகத்துக்கு சுயாட்சி: அதாவது Autonomy, தமிழரசுக் கட்சியும் இதைத்தான் கோருகிறது. சுயாட்சிஎன்பது வடசொல். தன்னுட்சி என்பதே அதன் சரியான தமிழ்ப்பதம். தன்னுட்சி என்பதுவேறு, தனியாட்சி என்பது வேறு: சரியோ தவறே ஈழத்தமிழ் நாட்டுக்கு தனியாட்சி வேண்டுமென்பவர் அன்றும் இன்றும் ஒரே ஒரு தனிமனிதர்தான். அவர்தான் இருவாளர் சுந்தரலிங்கம்.

ஃ

ம: சிவபாதசுந்தரம்
வவுனியா

கே: முன்னைய அரசாங்கத்தின் பிரதமருக்கும் தற்போதைய அரசாங்கத்தின் பிரதமருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: முந்திய பிரதமரும் சிங்களவர்; இப்போதைய பிரதமரும் சிங்களவர்; இது ஒற்றுமை. முந்திய பிரதமர் மனைவியில்லாதவர்; இன்றைய பிரதமர் கணவனில்லாதவர்; ஆது வேற்றுமை!

ஃ

—கேணிவண்ணன்
நெடுங்கேணி

கே: நீதியை நிலை நாட்டிய நீதிபதி மாட்டின், அரசியலிலும் நீதியை நிலைநாட்ட வேண்டுமானுல் இப்போது என்ன செய்யவேண்டும்?

ப: பா. உ: பதவியை உதறித்தள்ளி மீண்டும் தேர்தலில் போட்டியிடவேண்டும்!

ஃ

நா. க: குமாரதாசன்
நீர்கொழும்பு

கே: திருவாளர் மாட்டின் மந்திரிப்பதவிக்கு ஆசைப்பட்டா தமிழரசுக்கட்சியின் கட்டுப்பாட்டை மீறினர்?

ப: போகப்போகத் தெரியும்...!

கே: ஈழம்வாழ் தமிழர்களாகிய எமக்கு எப்போது விமோசனம் கிடைக்கும்?

ப: விடுதலைக்காக எதையும் இழக்கும் பரிபக்குவம் தமிழினத்துக்கு வரும் போது!

ஃ

வ. சொர்னலிங்கம்
மாசியப்பிட்டி

கே: 'நாடும் மொழியும் நமது இரு கண்கள் என்று திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் தனது வீட்டில் எழுதியிருக்கின்ருரே இது நியாயமா?

ப: வீட்டில்தானே எழுதியிருக்கிருர்; தனது இதயத்தில் எழுதவில்லையே!

கே: தமிழ்நாட்டு தமிழ்வாணனின் கொள்கையைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

ப: தமிழ்வாணனிடம் கொள்கை என்று ஒன்று இருந்தால் அல்லவா நான் கருத்துக்கூறுவதற்கு?

ஃ

செ. சின்னத்துரை
இல. 31. யூ. 2,
வவுனிக்குளம்

கே: ஆனந்தசங்கரி கட்சியில் இருந்து விலக்கப்பட்டால் ஓர் புதுக்கட்சியும் புதுக்கொடியும் உருவாகும் என்று சங்கரியாரின் குஞ்சுகள் சொல்லித்திரிகின்றனவே...!

ப: எல்லாம் வெறும் கப்ஸா! பொன்னம்பலத்தையும், உடுப்பிட்டி சிவசிதம்பரத்தையும் பயமுறுத்தவே இந்த கதையை கட்டிவிட்டு வருகிருர்கள் தமிழ் காங்கிரஸ் மூம்மூர்த்திகள்!

ஃ

மா. சிவஞானவதி,
கொக்குவில் மேற்கு

கே: 'வல்வை மகாநாட்டில்' எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் காட்டிலும் அதிகமான உரிமைகளைத் தங்களால் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று கூறியவர்கள் இன்று என்ன உரிமைகளைப் பெற்றுத்தந்துள்ளார்கள்?

ப: உரிமைகள் எதையும் பெருதது மட்டுமல்ல—தமிழினத்தின் அடிமை சாசனத்தில் கையெழுத்திட்டு, தமிழனின் அடிமை நிலையை அப்படியே ஏற்றுக்கொள்ளவும் போகிருர்கள்!

ஃ

க. பாஸ்கரன்
திருக்கோணமலை

கே: ஓய் குயுக்தி! மாட்டினைக் குறை கூற உமக்கு என்ன யோக்கியதை உண்டு. கவனம் உம்மைப் பூவால் எறிந்து கொல்லப்போகிறேன்...?

ப: நாவால் எறிபவர்களுக்கே அஞ்சாதவன் நான். இது...ப்பூ...!

ஃ

கணேஸ்
சங்குவேலி தெற்கு
மானிப்பாய்

கே: தமிழரசுக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொண்ட தமிழ் துரோகி மாட்டினை கட்சியில் இருந்து விலக்கியதை தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது எதிர்த்தார்களா?

ப: எவரும் எதிர்க்கவில்லை!

மு: கந்தசாமி
சரவகச்சேரி

கே: அரசாங்கத்துடன் சேர்ந்தபின் தமிழ் காங்கிரஸ் கட்சி அங்கத்தவர் மூவரும் தமிழ் மக்கள் பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் ஒன்றும் கூறியதாகத் தெரியவில்லையே! தமிழரசார் கொண்டுபோகும் பிரேரணைகளை எதிர்க்கவா இவர்கள் சேர்ந்தார்கள்?

ப: அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு அதனுடன் சங்கமமாகிவிட்டவர்கள் எப்படி அரசாங்கக் கொள்கைகளை எதிர்க்க முடியும்? நக்குண்டார் நாவிழந்தார் என்பது உங்களுக்கு தெரியாதா?

ஃ

செ. சோதிநாதன்
மருக்காரம்பளை

கே: தந்தை செல்வாவைப் பற்றி சில வரிகள்...?

ப: உரிமை உணர்ச்சி என்ருல் என்ன என்பதை ஈழத் தமிழினத்துக்கு சொல்லித் தந்த விடுதலைத் தலைவன்: அஹிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை அண்ணல் காந்தியை விட திறம்பட நடத்திக் காட்டிய சாந்தமூர்த்தி தமிழ்த்தேசிய உணர்வின் பிரதிபிம்பம்!

ஃ

எம். ஏ. எம் உபைதுல்லா
மன்ஞர்

கே: கலாநிதி மு. கருணநிதியின் தராதரம் பீ. ஏ. பி. எஸ். சி. எம். ஏ: — இதில் எது?

ப: இவையெல்லாவற்றையும்விட மிகச்சிறந்த தராதரம் கருணநிதியினுடையது —அதாவது நாலரைக் கோடி தமிழர்களின் ஈடிணையற்ற தலைவர்; அறிஞர் அண்ணுவின் முதல் தம்பி என்பதே அத்தராதரங்கள்!

ஃ

மோகன்
பருத்தித்துறை

கே: உண்மையாகத் தொண்டாற்றும் கட்சிக்கு பிரச்சாரம் ஏன்?

ப: உண்மையை நிலைநாட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஒரு வழக்குரைஞர் தேவைப்படுவதில்லையா? அது போலவே ஒரு கட்சியின்மீது சுமத்தப்படும் அபவாதங்களை மறுக்கவும் கட்சிக் கொள்கையை எடுத்து விளக்கவும் பிரசாரம் அவசியமே!

ஃ

ந: தில்லை வில்லாளன்,
43/1, பீச்ரோடு,
யாழ்ப்பாணம்.

கே: மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமைகளை பறித்த சட்டங்கள் எவை? இதில் ஜீ. ஜீ: ஆதரித்த சட்டங்கள் எவை எவை?

ப: மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமைகளை பறித்த சட்டங்கள் மூன்று. அவையாவன: (1) 1948ம் ஆண்டின் 18ம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம், (2) 1949ம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம், (3) 1949ம் ஆண்டின் தேர்தல் திருத்தச் சட்டம். இவற்றில் முதலாவது சட்டமும், மூன்ருவது சட்டமும் மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்தனர் இரண்டாவது சட்டம், மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தது போல—இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தால் பிரஜாவுரிமை இழந்தவர்கள், மீண்டும் குடியுரிமையை பெறுவதற்கான யோக்கிய தாம்சங்களை கடுமையான தாக்கவே கொண்டுவரப்பட்டது.

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை 1948ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இருந்த தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் ஏழுபேரும் எதிர்த்து வாக்களித்திருக்க வேண்டும். ஆனுல் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்தை மந்திரி பதவி என்ற ஆசைகாட்டி தம்வயப்படுத்தியிருந்தார் டி. எஸ். சேனநாயகா. சேனநாயகாவின் விருப்பப்படி இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை தமிழ் காங்கிரஸ் பா. உ. க்கள் எழுவரில் இருவர் மட்டுமே எதிர்க்க வேண்டுமென்றும் மற்றைய ஐவரும் சபைக்கு வராமல் விடவேண்டுமென்றும் கடைசி நிமிடத்தில் தீர்மானித்தார் திரு. பொன்னம்பலம்!

இதன்படி இச்சட்டத்தை திரு. பொன்னம்பலமும், செல்வநாயகமும் சபையில் எதிர்த்து வாக்களித்தனர். திரு. பொன்னம்பலம் ஒப்புக்காக இச்சட்டத்தை எதிர்க்காமல், உண்மையாகவே எதிர்த்திருந்தால் தமிழ் காங்கிரஸ் பா. உ: க்கள் அனைவரையும் எதிர்த்து வாக்களிக்க அனுமதித்திருக்க வேண்டும். காங்கிரஸ் கூட்டத்தில் முதல் நாள் எடுக்கப்பட்ட முடிவின்படி இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவென சபைக்கு வந்திருந்த அமரர் வன்னியசிங்கம், திரு. பொன்னம்பலத்தின் சர்வாதிகாரக் கட்டளையால் செய்வதறியாது குளியலறையில் ஓடி ஒளித்திருந்து தமிழினத்தின் தலைவிதியை எண்ணி அழுதார். இம்மசோதா நிறைவேறிய ஒரு கிழமையின் பின் திரு. பொன்னம்பலத்துக்கு மந்திரிப்பதவி கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தையும், தேர்தல் திருத்த சட்டத்தையும், மலைநாட்டுத் தமிழர் ஸ்தாபனமாகிய இலங்கை இந்திய காங்கிரசுக்கு எழுதிக் கொடுத்த வாக்குறுதிகளுக்கு முரணுக ஆதரித்து வாக்களித்தார் பொன்னம்பலம்! அப்போது தமிழ் காங்கிரசிலிருந்த இன்றைய தமிழரசுத் தலைவர்கள் காங்கிரசின் உண்மையான கொள்கையின்படி அதை எதிர்த்து வாக்களித்ததுடன் பொன்னம்பலத்தை விட்டும் பிரிந்தனர்.

ஃ

இ. முருகேசன்,
கொழும்பு-13.

கே: சுந்தரலிங்கத்தாரை அமிர்தலிங்கம் கதிரவேற்பிள்ளை தர்மலிங்கம் ஆகியோர் கண்டு பேசியதை வைத்துக்கொண்டு சிண்டு முடிய முனைகிருரே தினபதி யார்?

ப: இதே தினபதியாரின் சாக்கடைப் பேனுதான், அரசியலில் முரண்பட்ட ராஜாஜியும் கருணநிதியும் அண்மையில்ஒருவரையொருவர் சந்தித்துப் பேசியதைப் பாராட்டி அந்தப் பண்பாடு, ஈழத்திலும் வரவேண்டுமென்று 26-7-71 அத்தாணி மண்டபத்தில் 'புத்திமதி' கூறியிருந்தார். அவர் எழுதிய அந்தக் கட்டுரையின் 'மை' காய்வதற்கு முன்னர், ஈழத்தமிழகத்தில் வேறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய தமிழரசுத் தலைவர்களும் சுந்தரலிங்கமும் சந்தித்ததை வைத்துக் கொண்டு சிண்டு முடியும் சின்னத்தனத்தில் இறங்கியிருக்கிருர். தினபதியார் நேர்மையுள்ளவரானுல் சுந்தரலிங்கமும் தமிழரசாரும் சந்தித்துப் பேசிய அரசியல் பண்பாட்டை பாராட்டியல்லவா இருக்கவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடும் பயணம் போய்விட்டான்!

அம்மாபெரும் மலை தனது அமானுஷ்ய சக்தியனைத்தையும் ஆஜானுபாகுவான தோற்றத்தையும், கேவலம், ஒரு கட்டிலின் நான்கு விளிம்புகளுக்குள்ளும் அடக்கிக்கொண்டு நினைவிழந்த நிலையில் எமனுடன் போராடிக்கொண்டிருந்த காட்சியை அன்றுடன் ஆருவது தடவையாகக் கண்டுவிட்டு வந்தநான், மீண்டும் பழைய பொலிவுடன் இன்று செவ்வாய்க்கிழமை அவரை நீலநிறத்து நெடுமால் போலும் நீட்டி நிமிர்ந்து வீட்டில் படுத்திருக்கக் காண்கிறேன்.

ஆமாம், என் குருதி நாளங்களெல்லாம் வியாபித்துப் படர்ந்து கிடந்த என் குருநாதன்—தலைவன்—தந்தை—அண்ணன்—தோழன் — சேவகன் நித்திரையின் அழகு காட்டினும் எம்மை விட்டுவிட்டு நெடும்பயணம் போய்விட்டான். என்னை மகனேயென்றும் தம்பியென்றும் இராசாவென்றும் சகோதரா வென்றும் நண்பாவென்றும் தன்மனப் போக்கின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப மனதார அழைத்து தன் அந்தரங்க விடயங்களையெல்லாம் அளவளாவி ஆனந்திக்கும் என் அன்புக்குரிய டொக்டரைப் பார்க்கிறேன்.

**அன்புடன் அரவணைக்கும் அண்ணல்**

வாழ்க்கையிலே அழுது அழுது கண்ணீர் சுரப்பிகள் கூட வற்றிப்போன என் கண்கள் இப்போ அழுவதில்லை; ஆனால் இன்று அழுதன. ஊற்றுக்களின் வாயில் புழுதி பறக்கின்றது என்பதையும் மறந்து அழுதன; என்னைக் காணும் நேரமெல்லாம் கட்டியணைத்து முத்தமிடும் என் அன்புத்தலைவனை அணைத்து இரு கன்னங்களிலும் முத்தமாரி பொழிகிறேன்; மரத்து விறைத்துப் போன அந்த முகத்திலே எந்தவித சலனத்தையும் காணோம். ஐயகோ! நம்ப முடியவில்லை. ஒரு வாரத்திற்கு மேலாக எமனுடன் நடாத்திய ஜீவமரணப் போராட்டத்தில் திங்கட்கிழமை இரவு என் தலைவன் தோற்றான் என்ற சேதியை நம்பமுடியவில்லையே.

நான்கு நாட்களுக்கு முன்னரும் மருத்துவமனையில் டொக்டரின் மூத்த மகன் இலங்கை கேட்டார் ''பிழைத்துக்கொள்வாரா'' என்று.



ஈழத்தமிழகத்தின் தானைத்தலைவன் தமிழ்க்காவலர் ம. பொ. சிக்கு மாலை சூட்டி வரவேற்றிடும் காட்சி. இத்தகைய இனிப்பான காட்சியினை இனிக்காண முடியுமா?

அப்போது நினைவு தவறிப் போயிருந்தார். எதிர்ப்பின் முனையிலும் நெருக்கடியின் நடுவேயும் டொக்டரின் பலம் பன்மடங்கு பெருகுந்தன்மையது என்பதை அந்த ஆலமரத்தின் விழுதைப் பற்றிக்கொண்டே அவரது நிழலில் பல்லாண்டுகளாகப் படுத்துறங்கிப் படித்தவன் நான்.

''நோயாளியாகப் படுக்கையிலே சாகப் பிறந்த நோய்ஞ்சானல்ல டொக்டர், போர்க்களத்தின் நடுவினிலே போராட்டத்தின் உச்சக் கட்டத்திலே வீரமரணம் எய்தப் பிறந்தவர் அவர்'' என்றேன் உறுதியாக. இருப்பினும், இடையிலே ஒருவித சபலம். என் வாக்குப் பலிக்க வேண்டுமென்று தெய்வத்தை வேண்டிக்கொண்டேன்.

**தியாகத் தழும்புகளைத் தாங்கிய தலைவன்!**

புறநானூற்றின் புதிய அத்தியாயத்தை எழுதப் புறப்பட்ட எம் தலைமகன் போராட்டத்தின் மத்தியிலே இறந்தான் என்பதும் பொருத்தமானதே. சாவுக்கடவுளுடன் ஒரு வாரத்திற்கு மேலாக எம் தலைவன் நடாத்திய சமர் சாதாரணமானதல்ல; சாமான்யர்கள் ஒரு நாட்கூடச் சமாளித்திருக்கமுடியாதது.

பதறுகின்ற என் நெஞ்சில் பரவிநிற்கும் ஆயிரம் ஆயிரம் எண்ணங்களை எழுத முயல்கிறேன் முடியவில்லை; சேர்க்க முடியாமல் சிதறுகின்றன. பரந்தவெளிப் பரப்பு அந்த ஏந்தலின் இதயம். அங்கு குடியிருந்த எளியவர்கள் ஆயிரவர். ஆங்கு நடுநாயகமாய் உரிமையோடு தனிக் குடித்தனம்நடத்தியவன் நான். அந்த உரிமை வேட்கையிலே எழும் உணர்ச்சி நாதங்கள் ஓராயிரம் கதைகள் சொல்கின்றன.

மேதினியெங்கும் ஜெகசோதியாக ஒளியுமிழ்ந்து கொண்டிருந்த ஓர் இராட்சத மெழுகுவர்த்தி உலகுக்கு ஒளியூட்டுதற்காக உருகி யுருகி ஒன்றுமற்றுப் போனதுபோன்று, அம்மம்மாவோ! என் தலைவன் — தமிழ்த்தானை நடாத்திய தளகர்த்தன் — அமர்க்களம் பல கண்ட அடலேறு — தியாகத் தழும்புகளைத் தாங்கித் தாங்கித் தடித்துவிட்ட திண்டோள் மறவன் அருகிக் கருகிப் போய்விட்டானே.

வெண்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் வெற்றித் தோள்கள் என்று கவிஞன் கண்ட தோள்கள் எம் டொக்டரின் தோள்களன்றி எவரின் தோள்கள்? வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ் சொல்கின்ற மூச்சென்று கவிஞன் கண்ட மூச்சு எம் டொக்டரின் மூச்சன்றோ? ''பஞ்சமும் நோயும் உன் மெய்யடியார்க்கோ பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ?'' என்று பாரதி கேட்டது, ஹே சுதந்திரதேவி! எம் டொக்டரையொத்த சுதந்திரப் பித்தர்களின் —கர்ம வீரர்களின் —கதியைக் குறித்தன்றோ?

**டாக்டர் ஆற்றிய பணிகள்!**

தன் குலத்தையும் இனத்தையும் மறந்து கொழும்புச் சீமையிலே குதூகலமாக வாழக்கூடிய சூழ்நிலையிலே வாழ்ந்த டொக்டர் நாகநாதன், அச்சூழ்நிலைப் புகை மண்டலத்தை விலக்கிக் கொண்டு, தன் சொகுசுச் சூழலை விட்டெறிந்து தமிழ் மக்கள் மத்தியில் நடமாட வந்த தாற்பரியத்தை எழுதவா?

சொந்த வாழ்வு நொடிந்த போதும் ஒடிந்திடாத உள்ளமும் ஓயாத உடலுமாய் நடமாடி தமிழ் மாநிலமெங்கும் தமிழரசுப் பாசறைகள் சமைத்து, குதலைமொழி பேசிய குழவிப் பருவத்து இயக்கத்தை பெரும் அரசியல் சக்தியாக்கிய பேராண்மையைக் கூறுவதா?

மூதவையில் முழங்கிய செனற்றர் நாகநாதனின் சிம்மநாதத்தைச் சாற்றவா அல்லது சனப்பிரதிநிதிகள் சபையில் முழக்கிய சான்றாண்மையைப் போற்றவா? 1956, 1961 ஆம் ஆண்டுக

**கரிகாலன்**

ளில், காலிமுகத்திலும் கச்சேரி வாசலிலும் கலிங்கத்துப்பரணி பாடிய காதையும் அவரது சிறை வாழ்வைச் சித்தரிக்கும் காவியங்களும் தமிழ் மக்களின் உள்ளத்திலே சாசுவதமாக ஆழப் பதிந்துவிட்ட ஓவியங்களல்லவா?

கட்சியின் செயலாளர் நாகநாதன் செவ்விய சேவையும் கட்சித் தலைவராகத் திகழ்ந்த திவ்விய வாழ்வும் சொல்லித்தெரிய வேண்டாத சேதியம்புலிகள். வாய்ப்புக் கிடைக்கும் போது அன்னாரின் வாழ்வில் நான்கொண்ட பங்கிலே நினைவில் நிற்பவற்றை சுதந்திரன் வாயிலாக அறியத் தருவேன் — அவை சுவையானவை, சோகமயமானவை' சில நயமானவை பல நலிவைத்தருபவை.

1966 ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் டொக்டர் நாகநாதன் அவர்கள் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்றிருந்த நேரம்; பல விதத்திலும் நலிந்திருந்தனர். பல வித குழப்பங்களும் மயக்கங்களும் மலிந்திருந்தன. கட்சியின் அன்றைய அரசியலே மிகவும் மனக்கிலேசமானது. மனம் வெதும்பிய நான்

(10ம் பக்கம் பார்க்க)

# கண்ணீர்

மருத்துவன் ஒருவன் நோயாளி ஆனான்
மணித்தமிழுக்காக என்னும்

கருத்தொன்றே நின்னைக் காலங்கள் கோடி
காவியத் தலைவனாய்க் காட்டும்;

இரத்தமும் மூச்சும் இனியபொன்னுயிரும்
இனத்துக்கே ஈந்து நீ போனாய்...

சரித்திரத் தலைவா! தமிழ் நாக நாதா!
தவிக்கிறோம் ...... தவிக்கிறோம் ஐயா!

வேழத்தைக் காட்டும் வீரமா மேனி!
வெந்தழல் ஒளிகாட்டும் கண்கள்!

ஆழத்துக் கடலின் அளவு தன்மானம்!
அநீதிக்கு வளையாத நெஞ்சம்!

சூழத்துரத்தும் பகையை நொறுக்கித்
தொலைக்கும் தமிழ்த்தொண்டன் உன்போல்

ஈழத்தே தமிழர் இதயத்தே அன்னார்
எண்ணத்தே யார் இடம் பிடிப்பார்?

நீதிமா மலையே! அறம் வாழ்ந்த நெஞ்சே!
நெருப்பினில் நடந்த மாவீரா!

நீதினைத் தேடி மோதினை மோதி
தினம் தினம் மெலிந்தனை ஐயா!

நாதியற்றோராய் நலிந்த செந் தமிழர்
நம்பிக்கையானதோர் பொருளே!

பாதியில் போனாய் ...... பணியாலே செத்தாய்!
பாவிகள் இனியென்ன செய்வோம்?

— காசி ஆனந்தன்

# அரசியல் மடல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்றும் கூறினர்; ஆனால் வேறு சில முக்கிய அலுவல்கள் காரணமாக அவரை உடனே சென்று காணமுடியாமல் போய்விட்டது! இப்படி நம்மை ஏமாற்றிவிட்டு திடீரெனமறையப்போகிறார் என்று எப்படி நான் எதிர்பார்த்தேன்? என்ன சொல்ல எண்ணி என்னை அழைத்தனரோ? அவரது விருப்பப்படி உடனடியாக அவரைச் சென்று சந்திக்கத்தவறியதை எண்ணி இன்று வேதனை மிக அடைகிறேன்!

நண்பா, அழுதழுது ஆவதொன்றில்லை; டாக்டர் போனவர் போனவர்தான்; அவரது பணி முடிந்து அவர் போய்விட்டார்; இனி அவர் திரும்பிவரப் போவதில்லை; ஆனால் அவர் நமக்காக விட்டுச்சென்ற கொள்கைகள், அப்படியே இருக்கின்றன; அவர் தொட்டுச் சென்ற பணி அப்படியே இருக்கிறது; அவர் நட்டுச் சென்ற தமிழரசு மரம் அப்படியே நிற்கிறது; அவர் சுட்டிச்சென்ற பாதை அப்படியே தெரிகிறது! அவரால் உருவாக்கப்பட்ட 'நாகநாதன்கள்' ஏராளமானோர் நமது இயக்கத்தில் இருக்கிறார்கள். எனவே அவரது பணியினை தொடர்ந்து செய்வதே இன்று நம் முன்னுள்ள கடமையாகும்!

ஈழத் தமிழ் நாட்டின் விடுதலை வரலாற்றுக் காவியத்தில் அழியாத இடத்தை டாக்டர் நாகநாதன் பெற்று விட்டார்; விடுதலை வரலாற்று நாயகர்களில் அவரும் ஒருவராகி விட்டார்; ஈழத் தமிழர்களின் இதயங்களில் அழியாத காவியமாகிவிட்டார்!

ஒன்றே ஒன்று டாக்டர் அவர்களிடம் நான் இரந்து கேட்கிறேன். காலதேவன் யாசித்ததால், உனது உயிரையே காணிக்கையாக நீ கொடுத்திட்டாய்; அவ்வளவு பெரிய மனதுபடைத்தவன் நீ. அந்தப் பெரிய மனதுடன் இந்தச் சிறியவனுக்கும் கொஞ்சம் இரக்கம் காட்டு!


உனக்கே உரிய அந்த துணிச்சலை—உனக்கேயுரிய அந்த வீரத்தை — எதுவரினும் அநீதிக்கு பணிந்துகொடாது நீதிக்காக போராடும் அந்த ஆற்றலை—உனக்கேயுரிய அந்தத் தாய்மைக் குணத்தை—அன்பு உள்ளத்தை—ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் உயர் குணத்தை—தோல்விகளைச் கண்டு துவளாத மனோபாவத்தை—உனக்கேயுரிய அந்த அஞ்சா நெஞ்சத்தை—உனக்கே உரிய அந்த விடுதலை வெறியை—உனக்கே உரிய அந்த விசாலமான இதயத்தை--எனக்குத் தந்துவிடு! இரந்து கேட்கிறேன் ஐயா, எனக்குத் தந்து விடு!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் வேழம் வீழ்ந்தது!



## தமிழ் இலங்கை முழுவதும் கடும் துயரத்திலாழ்ந்தது!

### கறுப்புக்கொடிகள் எங்கும் பறந்தன!

**ஈழத்தமிழினத்தின் உரிமைக் காவலர்களில் ஒருவரும், அஞ்சாநெஞ்சனும், கடந்த கால் நூற்றுண்டுக்கு மேலாக தமிழினத்தின் அரசியல் வாழ்விலும் தாழ்விலும் பங்குபற்றியவரும், இரும்பு மனிதர் என்று தமிழ் மக்களால் இதயம் குளிர அழைக்கப்படுபவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்கள் இயற்கையெய்தினர் என்ற சேதி கிடைத்ததும் தமிழ் இலங்கை முழுவதும் கடும் துயரத்திலாழ்ந்தது!**

**தாயைப் பறிகொடுத்த சேய்போல—ஈழத்தமிழகத்தின் விடுதலைப் போராட்டத்தினை நடத்திவரும் முன்னணித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் நாகநாதன் அவர்களை இழந்து இன்று கதறித்தேம்பி அழுகிறார்கள் தமிழ்மக்கள்.**

டாக்டர் நாகநாதன் மறைந்தார் என்னும் சேதி அறிந்ததும், தமிழ் இளைஞர்கள் பலர் ஓவென அரற்றி வெய்துயிர்த்து அழுதகாட்சி உள்ளங்களை நெக்குருகச் செய்வதாயிருந்தது: பலர் இத்துயரச் சேதி அறிந்ததும் மூர்ச்சையடைந்து விழுந்தனர்.

இரும்பு மனிதர் இயற்கையடைந்த செய்தி கேட்டதும் ஈழத் தமிழ் நாடு முழுவதும் கருப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன: கடைகள் பூட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திலும் ஏனைய மாவட்ட கிளை அலுவலகங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன.

கொழும்பில், கொள்ளுப்பிட்டியிலுள்ள திரு. நாகநாதனின் இல்லத்துக்கு தமிழரசுத் தலைவர்களும், கட்சி ஆதரவாளர்களும், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், மற்றும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் சென்று, மறைந்த தியாகச்செல்வரின் பூத உடலுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்கள்.

டாக்டர் நாகநாதன் அவர்கள் 16. 8. 71 இரவு 11. 27. மணிக்கு கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் இயற்கையெய்தினர். டாக்டர் இறக்கும் போது அவருக்கு வயது 65.

### சோகத்தில் ஆழ்ந்தது மட்டுநகர்

டாக்டர் நாகநாதனின் மரணச்செய்தி கேட்டதுமே மட்டக்களப்பு நகரம் துயர வெள்ளத்தில் தோய்ந்தது. வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கின்றன. தனிப்பட்ட முறையில் தங்கள் வீடுகளிலும் கறுப்புக் கொடிகளை ஏற்றி மட்டக்களப்பு மக்கள் துக்கம் அனுஷ்டித்தார்கள்;

மட்டுநகர் மேயர் திரு: கு தியாகராசா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் பின்வருமாறு கூறியிருந்தார்:-

'தமிழ்மொழிக்காக — தமிழினத்துக்காக போராடிய ஒரு வீரனை இழந்துவிட்டோம். இலங்கையின் பிரபலமான வைத்தியர்களில் அவரும் ஒருவர். ஆயினும் தமிழ் இனத்தின் நலனுக்காக அவர் தமது சொந்த வாழ்க்கையையே அர்ப்பணித்தார்: அவரது தியாக சீலம் எல்லோருக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு'

தமிழரசுக்கட்சி உதவிச் செயலாளர் திரு: பாலசிங்கம் அனுதாபம் தெரிவிக்கையில், 'தமிழரசுக்கட்சியின் பொக்கிஷம் மறைந்துவிட்டது. தொழிலாளவர்க்கத்தின் தனிப்பெருங்குரல் அடங்கிவிட்டது.' என்று கூறினர்;

### வாழ்க்கைக் குறிப்பு

டாக்டர் நாகநாதன் அவர்களின் முழுப்பெயர் இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன்.

பிறப்பு:— 1906ம் ஆண்டு சனவரி மாதம் 31ம் திகதி.

கல்வி:— யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றில் படித்து அங்கிருந்து இங்கிலாந்து சென்று செல்ட்டன்காம் கல்லூரியில் படித்தார்; இலண்டன் சென். பாதெடலோமியூஸ் மருத்துவ மனையிலும் கற்று மருத்துவத் துறையில் எம்: பி. பி. எஸ், எம். ஆர். சி. எஸ், எல்; ஆர். சி. பி; ஆகிய பட்டங்களைப் பெற்று டாக்டர் ஆனார்;

### விளையாட்டு

இங்கிலாந்தில் செல்டன்காமில் கிரிக்கெட் ஆட்டத்தில் தொடக்கத்துடுப்பாளனாகவும் 'விக்கெட்' காப்பாளனாகவும் இருந்தார். சென். பாதொலோமியூஸ் மருத்துவ மனைக் கழகம், ஐக்கிய மருத்துவ மனைக் கழகம் 'குறூஸ் கீஸ்' ஆகிய விளையாட்டுக் கழகங்களின் சார்பில் 'றகர்' (Rugger) விளையாடினர். இங்கிலாந்தில் ஹேமிற்ஸ் ஹாக்கி கிளப்பிற்கு தலைமை தாங்கியவர். இந்திய ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டுக்குழுவில் நிலுவை (Reserve) வீரராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

## விடுதலை பரிமாறிய கை வீர நாகநாதன் கை!

### இராசமாணிக்கத்தின் இரங்கற் செய்தி!

ஒரு சாதாரண அரசியல் சூழ்நிலையில்—அரசாங்கம் ஒன்றில் அமைச்சனாய் இருப்பவனைவிட, ஒரு போராட்ட காலத்தில்—விடுதலை இயக்கம் ஒன்றில் தொண்டனாய் இருக்கிறவன் மிகவும் பெறுமதி உள்ளவன் ஆவான். அவன் அநீதி இழைக்கப்பட்ட ஒரு சமூகத்துக்காகப் போரடுகிறவன்.

வரலாறு அவனை ஒருபோதும் மறப்பதில்லை: டாக்டர் நாகநாதன் இப்படியானஒரு விடுதலை இயக்கத்தின் விலைமதிப்பில்லாத் தலைவரே. அவரைக் காலம் ஒருபோதும் மறக்கமாட்டாது.

இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்கள் டாக்டரின் மரணம் குறித்துக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:—

''தமிழினத்தில் டாக்டர்கள் இருக்கிறார்கள்; ஆனால் தமிழினத்தின் நோயைத் தீர்க்க இந்த டாக்டர்தான் முன்வந்து பாடுபட்டார். அதனால் அவர் தமிழினம் முழுவதுமே மறக்கமுடியாத பெருமகனாய் ஆகிவிட்டார்.

இலங்கைத் தமிழ்பேசும் இனத்துக்கு நாறு ஆண்டுகள் கழித்து விடுதலை வந்தாலும், அந்த விடுதலை டாக்டரின் கைகளாலும் பரிமாறப்பட்டு வந்த ஒன்றே என்பதை அப்போதும் தமிழினம் நன்றியுணர்வோடு எண்ணிப் பார்க்கவே செய்யும்''.

### தொண்டமான் இரங்கல்

'டாக்டர் நாகநாதன் தமிழரசுக் கட்சி உறுப்பினராக இருந்த போதிலும் சகல தமிழ் மக்களின் உரிமைக்காகவும் போராடி வந்தவர். அவரின் மறைவு தமிழினத்துக்கே ஏற்பட்ட இழப்பாகும். மலையக மக்களின் சார்பாகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சார்பிலும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

எஸ். தொண்டமான்,
இ. தொ. கா. தலைவர்.

### டாக்டர் நாகநாதன் சிறந்த லட்சியவாதி!

குமாரசூரியர் இரங்கல்

''தமது இலட்சியம் நிறைவேறும்வரை அதற்காகத் தயங்காது உழைக்கும் திடமான மனோபாவம் கொண்டவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன். தமக்கு சரியெனப்படும் எதையும் ஒளிக்காது மறைக்காது கூறும் நேர்மையுள்ளமே அவரின் புகழுக்கு அடிகோலியது.''

—இவ்வாறு அமைச்சர் செல்லையா குமாரசூரியர் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## 'தாழ்த்தப்பட்ட மக்களின் இரட்சகர் நாகநாதன்'

தாழ்த்தப்பட்ட மக்களின் இரட்சகனாக வாழ்ந்த பெருந் தலைவர் டாக்டர் நாகநாதனின் மறைவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேரதிர்ச்சியாகவே இருந்திருக்கும். மகாத்மா காந்தியடிகள் எப்படித் தம்மை ஒரு ஹரிஜன் எனக்கருதி ஒழுகி வந்தாரோ அவ்விதமே இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் இன விடுதலைக்காக அல்லும் பகலும் அயராது ஓயாது செயலாற்றி வந்த டாக்டர் நாகநாதனும் தம்மை சிறுபான்மைத் தமிழ் மக்களுள் ஒருவராகவே மதித்து அவர்களது உடன் பிறப்பாக—சகோதரனாக நடந்துகொண்டார். நாகநாதன் மறைவால் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் விடுதலை இயக்கம் பெரிதும் பாதிக்கப்படப்போவது உண்மையே என்றாலும், சிறுபான்மைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படப்போகிறதே என மிகுந்த வேதனை அடைகிறேன். சிறுபான்மைத் தமிழர் பிரச்சினைகளை, டாக்டர் நாகநாதனிலும் பார்க்க அதிகமாக உணர்ந்தவர்கள் வேறுயாரும் கிடையாது: டாக்டரின் மறைவால் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளேன். அவரது மறைவால் ஒரே குடும்பமாக இயங்கி வந்த இலங்கைத் தமிழரசு இயக்கத்தினர் தம் குடும்பத்தில் ஒருவரை இழந்துவிட்டார்கள். முன்னணிப் போர் வீரனைத், தானைத் தளபதியை தமிழ் இனம் இழந்து தவிக்கிறது: ஆற்றுவார், தேற்றுவார் இன்றித் தவிக்கும் தமிழ்ப்பேசும் இனத்துக்கு யாது சொல்லித் தேற்றலாமோவென அங்கலாய்க்கிறேன். அவரது உற்றார், உறவினர், குடும்பத்தவர் சிறப்பாகக் கட்சித் தொண்டர்கள் யாவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—இவ்வாறு யாழ் மாநகராட்சி உறுப்பினர் நா. த. செல்லத்துரை ஜே. பி. விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## திருமலை நகரசபையில் கறுப்புக்கொடி

நாகநாதனின் மறைவு கேட்ட திருகோணமலை தமிழ் மக்கள் மீளாத் துயரில் ஆழ்ந்தனர். திருகோணமலை நகரசபை உட்பட தமிழர்கள் வீடுதோறும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரசபை அவசரமாகக்கூடி டாக்டர் நாகநாதனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

### அஸீஸ் செய்தி

'மலைநாட்டில் வாழும் இந்திய தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடிய ஒரு தலைவனை இழந்து விட்டோம். இது ஒரு பேரிழப்பு. தமிழ் மக்களுக்காக அயராது போராட்டத்தை நடத்திய அதே வேளையில், இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் பரிந்து போராடிய வீர மிக்க அவரது மறைவால் எமது ஜ. தொ. கா. ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியுள்ளது. இது ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும்.'

ஜனாப் அஸீஸ் எம். பி.,
ஜ. தொ. கா. தலைவர்.

## தமிழ்காங்கிரஸ் பொதுச் செயலாளர் அனுதாபம்!

'டாக்டர் நாகநாதன் எனது நெருங்கிய நண்பர். தமிழர்களுடைய உரிமைகளுக்காகப் பாடுபட்டுவந்த துணிவு மிக்க அரசியல்வாதி அவர்.

அவர் நாடாளுமன்றத்தில் தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வரும்போதெல்லாம் அவைபற்றிய தனது கருத்துக்களை உறுதியுடனும் துணிவுடனும் எடுத்துக் கூறும் ஆற்றல் படைத்தவர்.

—மு. சிவசிதம்பரம்,
முன்னாள் உடுப்பிட்டி எம்; பி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு பாராளுமன்றக் குழுவுக்குள் குரோதம் மூட்ட தினபதியார் சூழ்ச்சி!

தினபதியார் மீண்டும் தனது நரி வேலைகளை ஆரம்பித்துள்ளார். தமிழரசுக் கட்சியை இதோ அழித்துவிடுகிறேன் என்று புறப்பட்டு விசர்த்தனமாக கட்சியுடன் மோதி தமிழ் மக்களால் காறியுமிழப்பட்ட தினபதியார், சூடு சுரணை, ரோசம் மானமின்றி தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியைப்பற்றி பச்சைப் பொய்களை எழுதி வருவதுகண்டு, உண்மையிலே தினபதியாருக்கு 'ஷூசோ' என்று இன்று தமிழ் மக்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்!

கழுபுபவன் என்பதே நமது கருத்தாகும்: தினபதியாரே, எங்கள் தாய் மொழியை—தங்கத் தமிழ் மொழியை அந்நியனுக்குக் காட்டிக்கொடுத்து—அந்த மொழியைக் காத்திடும் தமிழரசுக் கட்சியை—தமிழினத்தின் ஐக்கியத்தை—சிதைத்து இனத்துரோகம் புரிந்து அதனால் வரும்

போது நவரத்தினத்துக்காக முழுமூச்சுடன் பிரசாரம் செய்ததுடன் மட்டுமின்றி காவலூர் சென்று கூட்டத்திலும் பேசி நவரத்தினத்துக்காக வக்காலத்து வாங்கினீர்! நீர் போய் பிரச்சாரம் செய்தவேளைபோலும்—நவரத்தினம் தேர்தலில் மூன்ருவதாக வந்து மண் கவ்விஞர்; எப்படியோ இருக்க வேண்டிய நவரத்தினத்துக்கு நீரே பட்டை நாமத்தை சாத்தி மூலையில் உட்கார்த்தி விட்டீர். இன்று விலாசம் தெரியாத ஆளாக்கிவிட்டீரே அவரை!

கடந்த தேர்தலின்போது காங்கேசன்துறையில் போட்டியிட்ட சுந்தரலிங்கத்தை ஆதரித்தும், உம்மையே ஆளாக்கிவிட்ட தமிழரசுத் தந்தையை எதிர்த்தும் தீவிர பிரச்சாரம் செய்தீர்! தமிழ் மக்களை இந்து—கிறிஸ்தவர் என்று பிளவுபடுத்தும் நோக்குடன் வேலா—சிலுவையா என்று ஈனத்தனமாக பிரச்சாரம் செய்தீர்! செல்வாவை சூரனுக்கியும், சுந்தரலிங்கத்தை முருகனுக்கியும் கார்ட்டூன் போட்டீர்! முடிவு என்ன? உமக்கும் சுந்தரலிங்

மைப்போல் எச்சில் இலை காவுபவன் நானல்ல' என்று சூடாகப் போட்டவுடன் அதைமெல்ல விட்டு விட்டு 'கப்சிப்' ஆகினீர்! அதன் பின் தங்கத்துரை மூதூர் தமிழ் மக்களுக்கு தக்கபணி ஆற்றவில்லையென்றும், ஆசிரிய நியமனத்தில் பாரபட்சம் காட்டியதாகவும், மஜீத்தே தமிழ் மக்களின் நலனுக்காக உழைத்து வருவதாகவும், பொய்க் கதைகள் கட்டி தங்கத்துரைக்கு மூதூர் தமிழ் மக்களிடையே செல்வாக்கிழக்கவைத்து விடலாம் என்று பார்க்கிறீர்—தினபதியாரே உம்மைவிட, தங்கத்துரையை நன்கு அறிந்தவர்கள் மூதூர் தமிழ் மக்கள் என்பதை அறிந்துகொள்வீர்!

எங்கள் எழில் தமிழ் ஆளர் இராசதுரைக்கு சொற் பஞ்சமும் தமோற்றமும், எண்ணிய எண்ணியாங்கு வெளியிடுவதில் கஷ்டமும் ஏற்படுவதாக கூறி அவரை ஏளனம் செய்கிறீர்! இராசதுரை உமக்கு எழுதியிருந்தது போல் அவரது அறிக்கையை எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல் மாற்றுமால்

விடயம் பாராளுமன்றக் குழு கூட்டத்தில் இன்னும் விவாதிக்கப்படவேயில்லையென்றும் திரு. வி. தருமலிங்கம் நமக்கு தெரிவித்துள்ளார். திருவாளர்கள், இராசதுரை, தங்கத்துரை நேமிநாதன் ஆகியோரும் தினபதிச் செய்தி முழுவதும் பொய் என்றும் பண்டிதர் மீது கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென தாங்கள் யாரும் கோரவில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்ல—தினபதியார் வெளியிட்டுள்ளபடி தமிழரசு நாடாளுமன்றக் குழுக்கூட்டம் 11. 8. 71 செவ்வாய்க்கிழமையோ அல்லது முன்பின்னுகவே கொழும்பில் நடைபெறவேயில்லை! கூட்டமே நடைபெறுமலிருக்க கூட்டத்துக்கு வர முடியாதென நேமிநாதன் தந்தியடித்தாரென்பதும், செ. இராசதுரை, தங்கத்துரை ஆகியோர் அதில் கலந்து கொள்ளவில்லையென்பதும் சுத்த 'ஹம்பக்' அன்றி வேறென்ன? தினபதியார் எழுதுவதெல்லாம் சுத்தப் பொய் என்பதை எடுத்துக் காட்ட இதை விட வேறு

**மண்டியிடவைத்தார் பண்டிதர் இரத்தினம்! செருப்பாலடித்தார் செல்லத்தம்பு! காறியுமிழ்ந்தார் தங்கத்துரை! பத்திரிகா அதர்மத்தை கட்டிக்காட்டினுர் இராசதுரை! தினபதியாரே இன்னுமா நீ திருந்தவில்லை?**

தமிழரசுக் கட்சியையும் தமிழினத்தின் ஒற்றுமையையும் உடைத்தெறிந்துவிடும் நோக்குடன் தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்களை, கிழக்கு, வடக்கு என்று பிரித்து ஆளுக்கு ஆள் சிண்டு முடித்துவிடும் துரோக வேலையில் தினபதியார் ஈடுபட்டு வருகிருர்.

இதுகண்டு நாங்களோ, தமிழரசு பா. உ. க்களோ அதிர்ச்சியடைந்து விடப் போவதில்லை யென்பதை தினபதியாரே உணர்வார். நயவஞ்சகம், அடுத்துக் கெடுத்தல், பதவிவெறி, தமிழ் மொழி—இனத் துரோகம், பொய், பித்தலாட்டம், செய்நன்றிமறத்தல்—போன்ற கீழ்த்தர, கயமைக் குணங்களின் மொத்த வார்ப்படமே தினபதியார் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரிந்த விடயமாகும்.

தினபதியாரின் எந்த துரோக வலையிலும் தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, கட்சியின் ஏனைய தலைவர்களும் தொண்டர்களும் சரி, இஞ்சிற்றும் வீழமாட்டார்கள் என்பதை தினபதியாருக்கு திட்டவட்டமாக கூறி வைக்கிறேம்.

தாயின் கற்பை விலை பேசி, அந்தப் பணத்தைக் கொண்டு தனது வயிறு கழுவ நினைக்கும் சண்டாளனைவிடக் கேவலமானவன் தாய்மொழியை காட்டிக் கொடுத்து தன் வயிற்றைக்

பணத்தைக் கொண்டு உமது வயிறு கழுவுவதை விட, துளி விஷத்தைப் பருகி வயிறேயே விட்டு விடலாமே? ஆமாம் மான உணர்வு மிக்கவன் அப்படித்தான் செய்வான், உம்மிடம் தான் அந்த உணர்வே துளியும் இடையாதே! தமிழ்த் தாய் செய்த பாவத்தின் சின்னமன்றே நீர்!

தினபதியாரே தினபதியாரே, நீர் எத்தனை ஆட்டங்கள்தான் ஆடிப் பார்த்துவிட்டீர். தமிழரசுக் கட்சியை உம்மால் அழித்துவிட முடிந்ததா?

பாராளுமன்றத்தில் பேசாததையெல்லாம் பேசியதாக பொய்ச்செய்தி வெளியிட்டதற்காக ஒரு தடவைக்கு இரு தடவை தினபதியாரை மன்னிப்புக் கேட்க வைத்தார் பண்டிதர் கா. பொ. இரத்தினம். அப்படியிருந்தும் வெட்கம் கெட்ட தினபதியார் இன்னும் திருந்துவதாக இல்லை!

பாவம் வி. நவரத்தினத்துக்கு உற்சாகமூட்டி கட்சியிலிருந்து பிரித்தெடுத்தீர். நவரத்தினத்துடன் சேர்ந்து இன்னும் சிலர் கட்சியிலிருந்து வெளியே வருவரென்று நம்பி பொச்சடித்தபடி காத்திருந்து ஏமாந்தீர்! இறுதியில் கடந்த தேர்தலின்

## நடவாத நாடாளுமன்றக் குழுக்கூட்டம் தினபதியாருக்கு மட்டும் நடந்த அதிசயம்!

கத்துக்கும் பெரும் பட்டை நாமம் போட்டுவிட்டனர் தமிழ் மக்கள்!

தமிழரசுக்கட்சியின் பழம் பெரும் உறுப்பினரான வின்சென்டுக்கும் கட்சிக்கு மிடையே மோதலை ஏற்படுத்தும் நோக்குடன் வின்சென்ட் பெயரால் கட்சியை தாக்கி அறிக்கை வெளியிட்டீர்! அதனுல் கட்சியை அசைக்க முடிந்ததா!

தமிழரசுக் கட்சியின் முடிவுக்கமைய அரசியல் நிர்ணய சபையிலிருந்து திரு: மாட்டின் வெளியேற மறுத்த போது—மாட்டினுக்கு சார்பாக இன்னும் நாலு தமிழரசு பா. உ. க்கள் நிற்பார்கள்; அதனுடன் கட்சியுடைந்துபோய் விடும்; என்று கனவு கண்டீர்; கார்ட்டூன் போட்டு மகிழ்ந்தீர்; அந்த மகிழ்ச்சி நிலைத்ததா? மாட்டினுக்குப் பின்னுல் ஒருவர் கூட போகவில்லை! உமது துரோக ஆசையில் இடி விழுந்தது!

மாட்டினை வெளியேற்றும் தீர்மானத்தின்போது தாம்

வெளியிடாமல் அதைத் திரித்து மாற்றி தகிடுதத்தம் செய்துவிட்டு இராசதுரைக்கு சொற் பஞ்சம் என்று எழுதியிருக்கிறீரே இதை யார் நம்புவர்? இராசதுரைக்கு இருக்கும் தமிழறிவில் கோடியில் ஒரு பங்காவது உமக்குண்டா?

இறுதியாக தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் தெரிவு சம்பந்தப்பட்ட பிரச்சினையை தூக்கிவைத்துக் கொண்டு இப்பிரச்சினையில் கட்சியை கிழக்கு வடக்கென்று உடைத்து விடலாமென்று அங்கலாய்க்கிறீர்! பரிதாபம் இதிலும் ஏமாற்றம் அடைந்தீர்!

கல்வியமைச்சரை, தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் தேர்வு சம்பந்தமாக நேமிநாதன் பாராட்டினுர், தங்கத்துரை பாராட்டினுர் என்று எல்லாம் சிவப்பு வண்ணத்தில் கறுப்பு கோடிட்டு பச்சைப் பொய்ச் செய்திகளை வெளியிட்டு சில காலமாக இதற்கு களம் அமைத்தார் தினபதியார்!

என்ன உதாரணம் வேண்டும்!

13. 8. 71 தினபதியில்,—'காலமெல்லாம் கட்சிப்பணி செய்வோருக்கு பதவிஇல்லை' என்று தமிழரசுத்தொண்டர்கள் கட்சித்தலைவர்கள் மீது குற்றம் சாட்டுவதாக ஒரு கட்டுரையையே எழுதித் தள்ளியிருக்கிருர் தினபதியார். ஓர் உண்மையான தமிழரசுத்தொண்டன் ஒரு போதும் இப்படிக் கூறியிருக்

### எரியீட்டி

கவேமாட்டான்: தனது சொந்த மனவேதனையையே இப்படிக்கொட்டித் தீர்த்திருக்கிருர் தினபதியார். ஆம், செனட்டர் பதவியை எதிர்பார்த்து கட்சிக்கு வந்தவர்தானே அவர்! செனட்டர் பதவி கிடைக்காததனுல் தானே இன்று கட்சியையே அழித்தொழிப்பேன் என்று குரைத்து திரிகிருர்! பாவம் செனட் சபையே ஒழிந்து போகப்போகும் இச்சமயத்

## தமிழரசுக் கட்சியை வைத்து வயிறு கழுவும் தினபதியார்..!

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களிடையே செல்வாக் கிழந்து விட்டதாகவும், தமிழரசுக்கட்சி அழிந்துபோய் விடுமென்றும் தினபதியாரும் அரசியல் எதிரிகளும் ஒரு பக்கம் பிரசாரம் செய்துவருகிறுர்கள். ஆனுல் அதே நேரத்தில் நாளாந்தம் தமிழரசுக்கட்சியைப் பற்றியும், கட்சித்தலைவர்களைப்பற்றியுமே (பொய்யோ மெய்யோ) முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுவருகிருர் தினபதியார். இது ஒன்றே தமிழரசுக் கட்சிக்கு மக்களிடையே உள்ள செல்வாக்கையும், தமிழரசுக்கட்சியை மையமாகவைத்து (பொய்யோ—மெய்யோ) செய்தி வெளியிட்டால்தான் தமிழ் மக்களிடையே எந்தப் பத்திரிகையும் ஓடும் என்பதையும் எடுத்துக்காட்டவில்லையா? இதோ சில 'சாம்பிள்கள்'!

'தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்துக்கு மூடுவிழாவா—முழு விபரங்களும் திருமலை மக்களுக்கு தெரிவித்தே ஆகவேண்டும்—காணிகளை விற்றவர்களுக்கு திருப்பிக் கொடுப்பதே முறை—நேமிநாதன் எம். பி. வற்புறுத்து'

—6-8-71 தினபதி தலைப்பு செய்தி

'பண்டிதர் வாய்க்குப் பூட்டுப்போட தமிழரசு எம். பி:க்கள் வற்புறுத்து'

—12-8-71 தினபதி தலைப்பு செய்தி.

'மார்டின் வரவேற்பு எதிரொலி—தமிழரசுத் தொண்டர்கள் தலைவர்கள் மீது கடுந்தாக்கு'

—13-8-71 தினபதி தலைப்பு செய்தி.

'வங்காள தேச பிரமுகர் தமிழரசுத் தலைவருடன் இரகசியப் பேச்சு'

—14-8-71 தினபதி தலைப்பு செய்தி

## வயிறு கழுவுவதற்காக தமிழை விற்பதிலும் உயிரை விடுவது உயர்குணமன்ரே? தினபதியாரின் மரமண்டைக்குள் இது ஏறுமா?

நடுநிலை வகித்ததை திரு. செல்லத்தம்பு வெளிப்படுத்தியபோது, அதைப் பெரிதுபடுத்தி செல்லத்தம்புவை கட்சியிலிருந்தும் வெளியேற்றிவிடலாமா என்று நாக்கைத் தொங்கப்போட்டபடி முயற்சி செய்தீர்—பரிதாபம் ஏமாந்தீர்! செல்லத்தம்பு உமது பசிக்கிரையாகவில்லை! இரையாகக்கூடிய மனிதருமில்லை — வீரமரபில் வந்த வன்னித்தமிழரல்லவா அவர்!

அடுத்து தங்கத்துரை மீது கண்வைட்டம்விட்டீர்—தங்கத்துரையை கட்சியிலிருந்து [illegible] வீர்: திரு. தங்கத்துரை உம்

இந்தப் பொய்ச் செய்திகளின் பின்னுலுள்ள விஷநோக்கம் 12-8-71, 13-8-71 தினபதி செய்திகளிலிருந்து தெரிந்தது. அதாவது கட்சிப் பாராளுமன்ற குழுவுக்குள் வடக்கு, கிழக்கு என்று பிளவுண்டாக்கி, விடுவது தான் அந்த நோக்கமாகும்.

12-8-71 தினபதியில் வெளிவந்த தலைப்புச் செய்தி—"பண்டிதர் வாய்க்கு பூட்டுப் போட தமிழரசு எம். பி. க்கள் வற்புறுத்து' — என்பதாகும், இந்தச் செய்தியில் அணுவளவும் உண்மையில்லையென்றும், கல்வியமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும்

திலும் செனட்டர் பதவி மீதுள்ள ஆசை இன்னும் தினபதியாருக்கு தீர்ந்தபாடில்லை—

குமாரசூரியர் திட்டம்—ஆங்கிலத்தின் இடம் தமிழுக்கு — என்று கொட்டையெழுத்துக்களில் செய்தி வெளியிட்டு, குமாரசூரியரை பிரச்சினைக்குள் மாட்டிவிட்டு அவரது மானத்தை வாங்கி இறுதியில் காலைவாரிவிட்ட தினபதியார் இன்று கல்வியமைச்சர்மீது கடைக்கண் பார்வை காட்டி வருகிருர். கல்வியமைச்சரைஏதோ தாம் பாதுகாப்பது போல நாடகமாடுகிருர். பாவம்,

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தொடர்கதை

## அத்தியாயம் (10)

யாழ். ஜனார்த்தனன்

அன்பினால் பணியவைக்க முடியாத ஒன்றை பலாத்காரத்தினால் பணியவைக்கலாம் என்பார்கள் ஒரு சாரார். ஆனால் அன்பு என்ற ஒரு மாய அஸ்திரத்தின் மூலம் எதையும் பணியவைக்கலாம் என்று சிலர் கூறுவார்கள். எது எப்படி யிருப்பினும், வீரம் மட்டும் தனித்துச் சாதிக்க முடியாததை விவேகமும் சேர்ந்தால் சாதித்துவிட முடியும் என்று நம்புகிறவன் ரகுராமன். அவனுடைய விவேகத்தை நினைந்து வியந்துகொண்டிருந்தாள் பானுமதி.

அந்தப் பயங்கர விபத்து நடந்து ஒரு நாளாகிவிட்ட போதும், அப்போது நடந்த மாதிரித்தானிருந்தது பானுவுக்கு. அவள் இதுவரை காலமும் தெய்வம் என்ற ஓர் அருவ சக்தியைத் தான் வழிபட்டு வந்தாள். ஆனால் அவளுக்கு ஏற்பட்ட அந்த விபத்தின்பின். அந்த விபத்திலிருந்து காப்பாற்ய தெய்வமான ரகுராமனையும் சேர்த்து வழிபட ஆரம்பித்தாள்.

அவள் முதல் நாளிரவு கண்ட பயங்கரக் கனவில் இன்பத்துக்குப்பின் துன்பம் ஏற்பட்டிருந்தது. நடந்ததோ மாறுபட்ட நிகழ்ச்சி. அவள் இதயம் அடித்துக் கொள்ளும் ஒலி அவளுக்குக் கேட்டது. அதே வேளையில் பாரதி அங்கே வந்தாள்.

'என்ன பானு! இன்னும் பயம் நீங்கவில்லையா?'

'எப்படி நீங்கும்: அந்தச் சம்பவத்தை நினைத்தாலே என் உள்ளமும் உடலும் சேர்ந்து நடுங்குகின்றது பாரதி'' என்றாள். அந்த நிகழ்ச்சி அவள் மனதில் மீண்டும் நிழலாடியது;

வெளியே பார்த்த ரகுராமன் திடீரென எழுந்து கதவைப் பூட்டிவிட்டு நாகலிங்கம் பக்கமாகத் திரும்பி, 'என்ன மிஸ்டர் நாகலிங்கம்? நான் கேட்டபடி நடக்கப் போகின்றீர்களா? அல்லது நான் போகவா?' என்று தான் கொடுத்த பேப்பரை எடுக்கக் கையை நீட்டினான். வேண்டாமென்று அவனைத் தடுத்து நிறுத்திய நாகலிங்கம், பேப்பரில் கையெழுத்திட்டுவிட்டு, மேசை டிராயரைத் திறந்து பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கட்டொன்றை எடுத்து நீட்டினார்: நோட்டுக்களில் சிலவற்றை உருவிப்பார்த்த ரகுராமன் 'தாங்யூ மிஸ்டர் நாகலிங்கம்.' என்று கூறிவிட்டு பாக்கெட்டிலிருந்த ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து மேசை மீது வைத்தான், இதற்கிடையில் பலமுறை கதவில் தட்டும் சத்தம் கேட்டது.

ரகு எழுந்து கதவைத் திறந்துவிட்டான். உள்ளே நுழைந்த கீதா மிரட்சியுடன் மூவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

'மிஸ்டர் நாகலிங்கம்! இந்தப் பணம் பானுமதியைப் பங்கப்படுத்த நினைத்த உமக்குத் தண்டனைப்பணம். அப்பணத்தை உன்னை ஏவியவர்களிடமே அறவிட்டுக்கொள், ஒலிப்பதிவுக் கருவியில் எதுவுமே இல்லை. அது வெறும் விளையாட்டுக்கருவி.' என்று கூறிவிட்டு பானுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியேறினான்;

அவன் கைபிடித்த இடத்தை மெதுவாகத் தடவிப் பார்த்தாள் பானுமதி? அந்த இடத்தைத் தன் மென் இதழ்களால் முத்தமிட்டாள். அதில் அவளடைந்த இன்பம் எழுத்திற்கும் அப்பாற்பட்ட உணர்வுகளால் ஆன ஒன்றாகும்;

'என்ன பானு! கனவு காண்கிறாயா?' என்றாள் பாரதி.

'பாரதி! மிஸ்டர் ரகு இன்னும் வரவில்லையா?'

'அவன் வருவான், போவான். ஏன் பானு?'

'நான் அவரோடு சில விடயங்கள் கதைக்க வேண்டும்.'

'பானு! நீ அண்ணனை வெறுத்தாய்: நான்தான் அவனை நீ வெறுக்கும்படியான செய்திகளைக் கூறினேன். நீ இனி யார் சொன்னாலும் அவனைப்பற்றிக் கெட்ட எண்ணமே கொள்ள மாட்டாய். இல்லையா?'

'பாரதி! யாரை நினைத்து நான் பயந்தேனோ அவரே என் பெண்மையைக் காப்பாற்றிய தெய்வமாகி விட்டார். பாரதி 'ஜேம்ஸ் பொண்ட்' கதைபடித்திருக்கிறாயா?'

'ஆமாம்: அயன் ப்ளெமிஸ் எழுதிய நாவல்கள் அண்ணனிடம் நிறைய இருக்கே. படித்திருக்கிறேன்.'




'அந்த ஜேம்ஸ் பொண்ட் கூட ரகுவிடம் பிச்சைவாங்க வேண்டும் படி பாரதி. ரகு சாதாரண மனிதனில்லை, ஓர் அபூர்வ பிறவி. அது மட்டுமா பாரதி, எனக்கு 'ரென் தௌசன்ட்' மான நஷ்டமாக வாங்கி என் பெயரில் 'டிப்பாசிட்' செய்திருக்கிறார்' என்றாள்;

அதே வேளையில் நாகலிங்கம் அப்துல்லாவின் அந்தரங்கக் காரியதரிசியான ரோஸியிடம் ரகுராமனைப் பற்றிப் புகார் கூறிக்கொண்டிருந்தார்.

'நீங்கள் கூறுவதை என்னால் நம்பமுடியாது மிஸ்டர் நாகலிங்கம். மிஸ்டர் ரகுராமன் நாணயமானவர். நம்பக்கூடிய ஒருவர். அவர் ஒரு காரியம் செய்கிறாரென்றால், அதிலே ஏதோ ஒரு நல்ல விடயம் இருந்திருக்கும்.' என்றால் ரோஸி.

'ரோஸி, இந்த விடயம் அப்துல்லாவுக்குப் போக வேண்டுமென நான் விரும்பவில்லை. ஆனால் அந்த ஆசாமியை இனிமேல் என்னிடம் அனுப்பவேண்டாமென்று தான் கூறுகின்றேன்' என்றார்.

'அதைத் தீர்மானிக்க வேண்டியவர் 'பொஸ்'தான் என்று கூறிப் போனை வைத்துவிட்டாள் ரோஸி.

கீதாவின் மனதில் ஆயிரம் சர்ப்பங்கள் ஒன்று சேர்ந்து தாக்கினால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது நாகலிங்கத்தின் செய்கை. அவன் ரகுராமனை மடக்குவதற்காகப் பானுமதியைப் பழிவாங்க நினைத்தான். ஆனால் அத்திட்டம் அவனை [illegible] வாங்கியதன்றி, பத்தாயிரம் ரூபாய் நட்டத்திலும் கொண்டு சென்று விட்டுவிட்டது. மோகினியும் கீதாவும் சேர்ந்து அந்த விடயத்தை ராஜாராமனுக்குத் தெரியாமல் செய்துவிட்டனர்.

வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஏதாவது ஒரு சிறிய அல்லது பாரதூரமான சம்பவம் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிடுவதுண்டு. அப்படித்தான் பானுமதிக்கும் ஏற்படவிருந்த அந்தப் பயங்கரம் ஒரு திருப்புமுனையாகவே அமைந்துவிட்டது. அந்தத் திருப்புமுனையின் மைய ஊசியாக நின்றவன் ரகுராமனே. அவனைப்பற்றி நினைக்கும் பொழுது அவள் உள்ளத்தில் எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியவில்லை: அப்படித்தானே அவனும் அன்று கூறினான் என்பதை எண்ணிய பொழுது, அந்த நிகழ்ச்சி அவள் மனதில் நிழற்படம்போல் விரிய ஆரம்பித்தது;

நாகலிங்கத்தின் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே வந்ததும் அவளுடைய கையை விட்டுவிட்டு, 'மன்னித்துக்கொள் மிஸ் பானுமதி. 'ஆபத்துக்குப் பாவம் இல்லை' என்பார்கள். உன் கையை நான் பிடித்துவிட்டேன். சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்து இப்படி நான் செய்துவிட்டதாக நீங்கள் நினைக்கக்கூடும்' என்றான் கேலியாக.

'நீங்கள் நினைப்பது போல் இல்லை ரகு. நானே உங்களைக் கட்டிப்...' என்று தலையைக் குனிந்தவள், பின்பு நிமிர்ந்து அவனைப் பார்த்து, 'நான் ஒரு முடிவான தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன்' என்றாள்.

'முடிவான தீர்மானங்கள் எதுவும் கேவலம் மனித வாழ்வைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் இடையாது. சூழ்நிலைக்குத் தக்கபடிதான் தீர்மானங்கள் உருவாகும், மாறும்' ஆகவே என்னைப் பொறுத்தவரை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்படும் எந்த ஒரு விடயத்திலும் முடிவு கொள்வதில்லை. நீங்கள் கல்லூரிக்குப் போகின்றீர்களா?'

'இல்லை ரகு. எனக்கு மனம் சரியில்லை.' அவள் கூறுவதைக் கேட்டதும் ரகு சிரித்தான். தன்னை அவள் பெயர் கூறி அழைப்பதையும், அவள் முடிவுக்கு வந்துவிட்ட தீர்மானம் என்னவாகுமென்பதையும் அவன் ஊகித்துக்கொண்டிருந்தான். 'மிஸ் பானுமதி! அப்படியாயின் நாங்கள் பாங்கிற்குச் சென்று இதை 'டிப்பாசிட்' செய்துவிட்டு வரலாம்' என்றான்.

'நான் அவசியம் வரவேண்டுமா?'

'ஏன் என்னுடன் வர......'

'ரகு! அப்படியில்லை ரகு. எனக்கு என்னவோ போல [illegible] றும்படி என்னைப் பற்றித்தவறாக எதுவும் நினைக்காதீர்கள்' என்றாள்.

'ஆல்ரைட்' என்று கூறியவன், 'டாக்ஸி' ஒன்றைக் கைகாட்டி அழைத்தான். இருவரும் அதில் ஏறிக் கொண்டனர்;

'நேரே ஹோட்டல் 'டீலக்ஸ்'க்கு விடப்பா.' என்றான் ரகு. பானுமதி எதுவும் பேசவில்லை. அவன் ஹோட்டலுக்கல்ல எங்கே அழைத்தாலும் அவன் எண்ணப்படி நடப்பதற்கு அவள், சித்தமாயிருந்தாள். அவன் உரிய சமயத்தில் அங்கே வந்திருக்காது போனால் அங்கே தன் நிலை... எண்ணிப் பார்க்கவே அவள் உடல் நடுங்கியது;

ஆவி பறக்கும் ஒவல் நிரம்பிய ஒரு கோப்பையை அவளிடம் எடுத்து நீட்டினான் ரகு. நன்றி நிரம்பிய பார்வையுடன் ஒவலைவாங்கிப் பருகினாள் பானுமதி.

'நன்றாகப் பயந்து விட்டீர்கள் மிஸ் பானு.'

'ரகு! இப்படியொரு சதியைக் கீதாதான் தயார் செய்தாள் என்று எப்படி நீங்கள் தெரிந்துகொண்டீர்கள்?' என்றாள்.

அது ஒன்றும் பெரியவிடயமில்லை. அந்தச்சமயம் என்னை அங்கே அனுப்பிய எங்கள் கம்பனி முதலாளியைத்தான் நீங்கள் கும்பிடவேண்டும்.'

'ஐ ஆம் வெரி சொறி ரகு. உங்களுக்கு நான் இதுவரை நன்றிகூடக் கூறவில்லையே...' என்றாள். அவள் விழிகள் நீர் பனித்து நின்றன.

'பார்க்கப்போனால் நீங்கள் நன்றி கூறவேண்டிய அவசியமே இல்லை; மிஸ் ஏனென்றால் எங்கள் வீட்டிலிருக்கும் உங்களுக்கு ஆபத்தென்றால் அது என்னைப் பாதிக்கும். ஆகவே நான் செய்ததுஒன்று கடமை. மற்றது என் பெயருக்குக் களங்கம் இல்லாமல் காப்பாற்றிக் கொண்டது.'

'ரகு! இந்தப் பணத்தை நீங்கள் வாங்கியிருப்பது சரியில்லை.'

'உங்களுக்கு அதுபற்றிக் கூற உரிமையில்லை. நான் வாங்கினேன். உங்கள் பெயரில்தான் 'டிபாசிட்' செய்யப் போகிறேன்: உங்கள் திருமணத்துக்கு என் அன்பளிப்பு என்று ஏற்றுக்கொள்ளுங்களேன்' என்றான்.

அவன் கூறும் பொழுது அவன் முகத்தில் தோன்றி நின்ற பிரகாசத்தையும், முறுவலையும் பார்த்த பொழுது, தன்னையே தான் இழந்த நிலையில் 'ரகு' என்றாள்;

ஜேஸ், சொல்லுங்கள் மிஸ் பானு.'

'நீங்கள் ரேப் எடுத்தது எப்படி?'

'அது வெறும் டூப்: நான் ஆரம்பத்திலேயே அங்கே வந்துவிட்டேன். என்ன நடக்கிறது, பார்ப்போம் என்று தான் நின்றிருந்தேன்: நிலைமை மோசமடையுமுன்பு கதவைத் தட்டினேன்; அவ்வளவுதான்.'

இந்தப் பாவி உங்களைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்திருப்பாள். கதைத்திருப்பாள். நீங்கள் இவளுக்கு உங்கள் உயிரைக் கூடப் பொருட்படுத்தாது..., என்று கலங்கினாள்;

'மிஸ், நான் பலனை எதிர் பார்த்து உதவி செய்வதில்லை. செய்யவும் மாட்டேன்; நீங்கள் என்னை எப்படி வேண்டுமானாலும் நினைக்கலாம். நினைத்திருக்கலாம். அதற்காக உங்களை நான் தவறாக நினைப்பேன் என்று நீங்கள் நினைப்பது தவறு. அப்படி நினைத்தால் உங்களுக்கும் எனக்கும் என்ன வேறுபாடு?' என்று அவன் கூறிவிட்டுச் சிரித்தான்;

'உங்களைப் போலவே உங்கள் பேச்சும் அழகாகத்தானிருக்கின்றது.' என்றாள்.

'என் பேச்சு மட்டுமில்லை மிஸ் பானு என் உள்ளமும் அப்படித்தான்; அழுக்கு மனமுடையோர்க்கு நான் மாறுபட்டுத் தெரிந்தாலும் உண்மை வேறுதான்: சரி புறப்படுங்கள். இதோ இந்த ரசீதையும் நீங்களே வைத்திருங்கள்: அவன் மீண்டும்வாலாட்டினால் இன்னும் பத்தாயிரம் ரூபா உங்களுக்கு வரும்.' என்று அவளிடம் நீட்டினான். அதை வாங்கிய பொழுது அவள் விரல்களில் அவன் விரல்கள் தொட்டு உறவாடின. அவன் அதை லட்சியப் படுத்தாதவனாகத் திரும்பிப் பக்கட்டில் என்னவோ ஒன்றை எடுத்து, 'மிஸ் பானு, இதைப் பார்த்தீர்களா?' என்றான், புன் சிரிப்புத் தவழும் இதழ்களை நாவினால் தடவிக்கொண்டே அவனையும், அவன் கையிலிருக்கும் பொருளையும் அதிசயத்துடன் பார்த்துக்கொண்டு நின்றாள் பானுமதி.


உ

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விரோதிகிருது ஆண்டு ஆவணித்திங்கள் 10ம் நாள் (26-8-71) வியாழக்கிழமை மாலை 7-00 மணி முதல் 9-09 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| எமது புத்திரன் திருநிறைசெல்வன் | எனது புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| சண்முகராசா அவர்களுக்கும் (கிளை முகாமையாளர் யாழ்ப்பாண மாநகர ப. நோ. கூ. சங்கம்) | இராசம்மா அவர்களுக்கும் |

நல்லூர் சிவன்கோவிலில் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் 27-8-71 பி. ப. 5.00 மணியளவில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

வே. சுந்தரம்பிள்ளையும் பாரியாரும்
''ஜயந்தி வாசா''
18, அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

க. இலகுப்பிள்ளை
வேலணை மேற்கு,
வேலணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் பெயரையே உதறியெறிந்த சிறந்த தேசபக்தர் டாக்டர் நாகநாதன்!

வழக்கறிஞர் எஸ். சிவசுப்பிரமணியம்

டாக்டர் நாகநாதனின் திடீர் மரணம் பொதுவாக இந்நாட்டுக்கும் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்: சுதந்திர உணர்ச்சி, பெரிய இலட்சியங்களுக்காக அஞ்சாது போரிடுதல், தியாக உணர்வு, சுயசிந்தனை —ஆகியவை மறைந்த டாக்டர் நாகநாதனின் சீரிய சில பண்புகளாகும். இந்தப் பண்புகள் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்த ''ஹென்ஸ்மன்'' குடும்பத்தினருக்கே உரிய பண்புகளாகும். இக் குடும்பத்தினர், இந்தியாவினதும், இலங்கையினதும் கலாசார, சமூக, அரசியல், கல்வித்துறைகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பங்கினை ஆற்றியிருக்கிருர்கள்: யாழ் குடாநாடும், சென்னை பட்டணமும் ஹென்ஸ்மன் குடும்பத்தினரின் சேவைகளை பெறும் பாக்கியம் பெற்றிருக்கின்றன: 'ஹென்ஸ்மன்' என்ற பட்டப்பெயர் வெள்ளைக்காரர்களுடன் ஏற்பட்ட தொடர்பாய் அக்குடும்பத்துக்கு வழங்கப்பட்டதாகும்:

தேசிய உணர்ச்சிகொண்ட நாகநாதன் 'ஹென்ஸ்மன்' என்ற ஆங்கிலப் பெயரை நிராகரித்துவிட்டு தனது பழைய குடும்பப் பெயரான 'நாகநாதன்' என்ற பெயரை வைத்துக்கொண்டார்:

இளமைக்காலத்திலிருந்தே அரசியலில் ஈடுபட்டிருந்தவர் நாகநாதன். சென்னையில் அவர் மாணவனாக இருந்தபோது, வேல்ஸ் இளவரசர், எட்டாவது எட்வேட் மன்னர், வின்சர் கோமகன் ஆகியோரது விஜயங்களை பகிஷ்கரித்து மகாத்மா காந்தி இயக்கம் நடத்தினர். அந்த இயக்கத்தில் ஈடுபட்டு பொலிசாரால் அடி உதை பட்டவர் நாகநாதன்: இதுதான் அவரது அரசியலின் தொடக்கம்:

டாக்டர் நாகநாதன் தனது வைத்தியத் தொழிலும் ஈடு இணையற்றவராக விளங்கினர். ஏழைகளுக்கு பண உதவிகளும் செய்தார். அரசியலில் ஈடுபட்டு தனது இனத்துக்காகவும் நாட்டுக்காகவும், வருமானம் மிகுந்த தனது வைத்தியத் தொழிலையே தியாகம் செய்தார்.

அவர் தமிழ் காங்கிரசின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அதன் இணைச் செயலாளர்களில் ஒருவராகவும் பணியாற்றினர். அவருடன் இணைந்து நானும் செயலாற்றியிருக்கிறேன்:

அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதையிட்டு, கருத்து வேறுபாடுகள் தோன்றியமையினுல், திரு. செல்வநாயகம், சி. வன்னியசிங்கம், டாக்டர் வி. கே. பரமநாயகம், ஆகியோருடன் சேர்ந்து தமிழரசுக் கட்சியை உருவாக்கினர்:

தமிழ் காங்கிரசிலும்சரி, தமிழரசுக் கட்சியிலும்சரி அவர் ஓர் உயர்ந்த இடத்தைப் பகிர்ந்து வந்தார். இங்களவர், பறங்கியர், முஸ்லிம்கள், ஆகிய சமூகங்களிலிருந்து பல நல்ல நண்பர்கள் அவருக்குண்டு.

அவர், அந்தரங்க சுத்தியுடன் தமிழினத்துக்காக ஆற்றிய சேவைகளை தமிழ் மக்களும் இந்த நாடும் என்றும் மறக்காது.

---

## ஈழத் தமிழ் வேழம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

### பொதுவாழ்வு

இங்கிலாந்தில் படிக்கும் போதே மொரொக்கோ நாட்டு மூஸ்லிம் மக்களின் சுதந்திரத்துக்காக ஸ்பானிஷ் பிரெஞ்சு துருப்புக்களுடன் போர் புரிந்து முழங்காலில் விழுப்புண் ஏற்றதுடன் சிறையிலடைபட்டார்:

இங்கிலாந்தில் படிக்கும் காலத்தில் 'இலண்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் சேர்வின்சன்ட் சர்ச்சிலுடன் சிங்கப்பூரில் அமைக்கப்பட விருந்த கடற்படைத் தளம் குறித்து கடிதப்போர் நடத்தி, வின்சன்ட் சர்ச்சிலை மடக்கினர்:

ரஷியா இரும்புத்திரை நாடு என உலகமே கூறிய போது முதன் முதலாக ரஷ்யாவுக்குப்போன ஒரு சிலரில் டாக்டர் நாகநாதனும் ஒருவர்: டாக்டருடன் முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சரான திரு: கிருஷ்ண மேனன் எம்: பி. ஜோர்ஜ் லாண்டர்பா தம்பதிகள், சாக்லட்வாலா ஆகியோரும் இருந்தது குறிப்பிடத்தக்கது:

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட பெருமையும் டாக்டருக்குண்டு. வேல்ஸ் இளவரசர் வருகையை எதிர்த்து கறுப்புக்கொடி பிடித்து பொலிசாரின் குண்டாந்தடியடிபட்டவர் டாக்டர் நாகநாதன்.

இலங்கை திரும்பியதும் ஒடுக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழினத்துக்காகப் போராடுவதற்கு தமிழ் காங்கரஸ் கட்சியை மற்றவர்களுடன் சேர்ந்து அமைத்தார். 1947ம் ஆண்டு அக்டோபர் 6ம் திகதி முதன் முதலாக முதலைக்கு தெரிவு செய்யப்பட்டார். 1960 மார்ச் தேர்தலில் முதன் முதலாக நல்லூர்தொகுதி பா: உ.ஆனர். முதவை உறுப்பினராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த ஒரேதமிழர் இவரே.

தமிழ்காங்கிரஸ் விடுதலைப் போராட்டத்தை கைவிட்டு யூ. என். பி: யிடம் என்று சரணாகதியடைந்ததோ அன்றே அதிலிருந்துவெளியேறி திரு. செல்வநாயகம், வன்னியசிங்கம் ஆகியோருடன் சேர்ந்து 1949 ஆண்டு டிசெம்பர் 19ம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சியை உருவாக்கி அதன் இலட்சியங்களுக்காக சாகும்வரை உழைத்தார். தமிழரசுக் கட்சி' உருவான பின்னர் டாக்டரின்' தன்னலமற்ற அயராத உழைப்பு தமிழ் மக்கள் அறிந்ததே:

---

## நெடும் பயணம்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

டொக்டரின் மேன்மட்டத்து வாழ்வையல்ல நில மட்டத்திற்குக்கீழே புதைத்திருப்பதும் பலருக்கு நினைவில் தவறிவிட்டதுமான வாழ்வை உரைத்துக்காட்டி அவரையொட்டி சிறிய நூலொன்றை வெளிக் கொணர்ந்தேன்: பலவித வெளிக்கட்டுப்பாட்டின் கீழும் தாழ்ப்பாள் இட்டுக் கொண்டு எழுதப்பட்ட இந் நூலின் சுருக்கமான முகவுரை பின்வருமாறு:

'கிளைத்துத் தளிர்த்துப் பூத்துக் குலுங்கி மலரும் கனியும் நிழலும் வழங்கி நின்று நிலைத்த ஒரு நெடு மரம், இன்று, இலையுதிர்ந்தும் வேரறுந்தும், பட்டும் பட்டைவிட்டும் சரிந்துகொண்டிருக்கும் காட்சியைக் கண்டேன்; கண்ணீர் துளிர்த்தது. சுண்டியெறிந்தேன், சொற்களாயச் சிதறிற்று.'

அந்த நெடுமரம் இன்று தடலெனச் சாய்ந்துவிட்ட சேதி மிகவும் கொடூரமானது.

---

## தமிழரசு பாரா...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியமைச்சருக்கு ஏதோ போதாத காலம் போலும்!

இறுதியாக ஒன்று — தினபதியாரே உமது சாக்கடைப் பேனுவால் எதையாவது எழுதும். ஆனுல், தமிழரசுக் கட்சிக்குள் சிண்டு முடியவோ தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை உடைத்தெறியவோ உம்மைப்போல ஓராயிரம் பேர் திரண்டு வந்தாலும், ஒருபோதும் முடியவே முடியாது. ஏனெனில் இயக்க உணர்வால் பின்னிப் பிணைக்கப் பட்டிருப்பவர்கள் நாங்கள். எங்களிடம் வாலை ஆட்டினுல் உமது வால்தான் அறுக்கப்படும்!


## மொழிப் பிரச்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

things. We are saying the same thing. What I am saying is what the hon. Member for Kankesanturai now said. There is no qnibbling involved. The hon. Member for Kankesanturai is far more honest than most people, and I have no difficulity in understanding him completely." [OFFICIAL REPORT, 23 December 1961; Vol. 45; c. 1825]

கௌரவ பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்கா அவர்கள் கூறியது: ''காங்கேசன் துறைத் தொகுதிப் பிரதிநிதி கூறியதற்கும் நான் கூறியதற்கும் வித்தியாசம் இல்லை. அவர் நீதிமயமானவர்; அவரை நான் நம்புகிறேன்; அவர் கூறுவதைத்தான்' என்பதுதான். இதிலிருந்து மற்றக் கட்சிகள் எம்மை ஐயப்படத் தேவையில்லை:

---



யாழ்ப்பாணம் கச்சேரியின் முன் நடைபெற்ற அறப்போராட்டத்தில் அரசினர் 'ஜீப்' வண்டியைத் தடுத்து நிறுத்தி சிங்கம்போல் நிற்கிருர் நமது டாக்டர்: போலீசார் திகைத்து நிற்கும் போர்க்காட்சி இது.

---

# டாக்டர் நாகநாதன் போய்விட்டார்; ஆனுல் அவரது வீரம் நம்மோடு இருக்கிறது!

என் அன்னையே தமிழ் மாதாவே, ஏன் அம்மா எங்களை சோதிக்கிருய்? எங்களை சோதித்துத்தான் நீ அழகு பார்ப்பது என்ருல் அந்த சோதனையை நாங்கள் மனமார ஏற்று தமிழ் இன விடுதலைக்கு தயாராக இருக்கிறோம்.

எப்படிப்பட்ட சூழ்நிலையில் டாக்டர் எங்களை விட்டுப் பிரிந்தார் என்று எண்ணும் போதுதான் தாங்கமுடியவில்லை — யாழ்ப்பாணக் கச்சேரிகோட்டைமுன் தமிழர் பெரும்படை முற்றுகை இட்ட நேரத்தில் எங்கள் இரும்பு மனிதர் காட்டிய வீரம் தமிழர் வீரம், அது இராவணன் கம்பீரம், ஐயகோ எங்கள் இரும்பு மனத்தையும் கரும்புப் பேச்சையும் காண முடியாமல் கண் மூடிக்கொண்டாரே.

அவர் கடைசியாகத் தலைமை தாங்கிய கூட்டம் தமிழ்த் தாய் மன்றத்தின் சார்பாக, பேரறிஞர் அண்ணுவுக்கு சிலைவடிக்க நிதி திரட்டிய கூட்டம். அண்ணுவுக்கு இங்கு சிலை செய்ய பணம் தேடிக்கொடுத்து அமரர் அண்ணுவோடு இலங்கை மக்களின் நிலையை பேசப் போய் விட்டார். டாக்டர் நம்மை விட்டுப் போனுர் அவர் வீரம் நம்மோடு இருக்கும். அந்த வீரத்தை இதயத்தில் தாங்கிக் கொண்டு அந்த பெருமகனுர் ஆவி பிரிந்த திக்கு நோக்கி வணங்குவதன்றி வேறு வழி அறியேன். நான் வகை அறியேன்:

ஏ. எஸ். மணவைத்தம்பி
இ. தி. மு. க:
பொதுச்செயலாளர்

---

## வன்னியர் அழைத்தனரோ?

வரும்பிணி மாறநல் மருந்துகள் தந்து
அரும்பணி ஆற்றி அவனிருக் கையில்
பெரும்பிணி தமிழெனும் பேரினள் கண்டு
அருமருந் தாக அவனையே தந்த

வைத்தியன் மாய்ந்து போனதுமேன்?
வையகம் நோவினில் ஆனது மேன்?

கரும்பெனும் மொழிக்காய் களங் கண்டாய்!
இரும்புத் தலையினில் அடி கொண்டாய்!
விரும்பிப் பலமுறை சிறை யுண்டாய்!
இரும்பா இதயமும்? ஏன் பிரிந்தாய்!

நாகநாத நடந்தது ஏன்?
நந்தமிழ் இனத்தை மறந்தது ஏன்?

நாதனென் றுனையே கொண்டவ ரெல்லாம்
ஏதமில் உன்னை இழந்த வஃதாலே
ஏதினிச் செய்வோம் என்றுரை யிலாது
வேதனை தன்னில் வீழ்ந்திடச் செய்து

மாளாத் துயிலிற் படுத்தது ஏன்?
மற்ரூே ருலகம் அடுத்தது ஏன்?

தன்னருந் தமிழாள் தவித்திட வைத்து
பண்ணிய செய்வது பாதியில் விடுத்து
எண்ணியே எமையெல்லாம் ஏங்கிட வைத்து
விண்ணுல கதற்கு விரைந்தது ஏனே?

வன்னியர் நின்னை அழைத்தனரோ?
வானுல குன்னை விழித்ததுவோ?

—வல்வையூர் கனக மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையற்ற காலனே கடமை வீரரை ஏன் கவர்ந்தாய் கண்ணீர் விடுகிறதே கன்னித் தமிழர் சமுதாயம்!

'இரும்பு மனிதர்' நாகநாதன் இறந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்ட நான் என்னை மறந்து சிலையாக நின்றேன். ஓடினேன் கொழும்பில் உள்ள அவரது வாசஸ்தலத்துக்கு. அங்கே நான் கண்ட காட்சியை எப்படி எடுத்துரைப்பேன்.

உயர்ந்த உள்ளமும் உறுதியான கொள்கையும், அஞ்சாத நெஞ்சமும் படைத்த அந்த உயர்ந்த அரசியல் மேதையின் உயிர் அற்ற உடல்தான் கிடத்தப்பட்டுக் கிடந்தது.

எதையும் தாங்கும் இதயம் கொண்ட அந்த அஞ்சாத நெஞ்சத்தோன் அடியற்ற மரம் போல சாய்ந்து கிடந்தார். உற்ருர், உறவினர் ஆதரவாளர்கள் எல்லோரும் கதறி அழுது கண்ணீர் வடித்த வண்ணமிருந்தனர். ஏன்! தமிழ்த்தாயே தன் அடிமை விலங்கை உடைக்க உருவெடுத்த உத்தமன் மறைந்து விட்டானே என்று கண்ணீர் விட்டு அழுதிருப்பாள். இதையெல்லாம் எண்ணும்போது இதையும் தாங்க ஏது எனக்கு இதயம்.

விதியே எவ்வளவு விரைவாக உன் விளையாட்டை முடித்து விட்டாய், தமிழ் இனத்தின் உரிமைக்காக வாதாடி உயிர்விட்ட உத்தமர்கள் கோப்பாய் கோமகன் அமரர் வன்னியசிங்கம். திருகோணமலை ஈன்ற தியாகி அமரர் இராஜவரோதயம், மூதூர் முதல்வர் அமரர் ஏகாம்பரம் இவர்களை எல்லாம் இழந்த பின்பு' இரும்பு மனிதர்' இருக்கின்ருர் என்று இதய வலிமையுடனிருந்தோமே இவரையும் பறித்து விட்டாயே இது என்ன வேதனை.

தமிழினத்தின் தன்மானம் காக்கப் புறப்பட்ட புலியே! உன்னை இழுந்து எங்கள் தமிழினம் என்ன செய்யப் போகிறது? கடமை என்ற வாள், கட்டுப்பாடு என்ற கவசம், கண்ணியம் என்ற கேடயம், இவைகளை ஆயுதமாகக் கொண்டு தமிழினத்தின் உரிமைக்காக, உயர்வுக்காக சிறப்புக்காக உழைத்த உத்தமரே உன்னைப் பிரிந்து துயரை எப்படி மாற்றுவோம், மறப்போம்.

தந்தை செல்வாவின் அன்புப் பாசறையில் அடக்கத்துடன் வளர்ந்த துடிப்புமிகு சிங்கமே, இன்று தந்தையும், உன் வழியில் வளர்ந்து வரும் நாங்களும், கண்ணீர் விட்டு அழ எங்களைப் பிரிந்து எங்கே சென்றுவிட்டாய்? தவித்து தத்தளித்துக் கொண்டிருந்த தமிழினம் என்ற கப்பலை விடுதலை என்ற கரையை நோக்கி செலுத்தி வந்த விடுதலைச் சிங்கமே! விதி உன்னை அணைத்துக்கொண்டதா? ஈழம் வாழ் வாலிபர்கள் சார்பாக வேண்டுகின்றேன்: இறைவா அவரின் ஆத்மாவை சாந்தியடையச் செய்.

—இவ்வாறு மூதூர் தொகுதி பா: வு.ம் தமிழரசு வாலிபமுன்னணித் தலைவருமான திரு: அ: தங்கத்துரை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறுகிறார்.

## உள்ள சுத்தியுள்ள பெருஞ்சீலர்

டாக்டர் நாகநாதன் தமிழர் விமோசனத்திற்காக தொண்டாற்றியவர். உள்ள சுத்தியுள்ள பெருஞ்சீலராக அவர் தன் செயல்களில் கண்ணும் கருத்துமாக விருந்தார். அவ்ரின் மரணம் திடீர் அதிர்ச்சியை தந்தது என்று அகில இலங்கை முற்போக்குத் தமிழர் அபிவிருத்தி இயக்கத்தின் தலைவர் திரு. ச. சுந்தரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தி யொன்றில் கூறியுள்ளார்.

## ஈழத்துநாதன் இரங்கல்

"டாக்டர் நாகநாதன் அவர்களது பிரிவு ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும். தமிழ் மக்களுக்கு அவர் செய்த சேவை அளப்பரியது. திருகோணமலையைப் பாதுகாப்பதில் அவர் தீவிர அக்கறை காட்டியவர்".

—இவ்வாறு இலங்கை துறைமுக தொழிலாளர் கழக செயலாளர் திரு. ஈழத்து நாதன் விடுத்துள்ள இரங்கற்செய்தியில் குறிப்பிடுகிறார்.

## தமிழணிச் சபை இரங்கல்

"ஈழத் தமிழ் மக்களின் அரசியலிலே கள்வர்களும், எட்டப்பர்களும் — காட்டிக் கொடுக்கும் துரோகிகளும், மலிந்துள்ள இந்த வேளையிலே, தமிழுக்காக—தமிழனுக்காக—ஈழத் தமிழ் நாட்டிற்காகப் போராடிவரும் தமிழரசுக்கட்சியின் ஓர் முக்கிய அங்கமான, வீர வரலாறு பலவற்றைக்கண்ட இரும்பு மனிதராம் எம் மதிப்பிற்குரிய டாக்டர் நாகநாதனின் மறைவு கேட்டு ஈழத் தமிழினமே துயரில் மூழ்கியிருக்கிறது.

தமிழினத்தின் மத்தியிலே இன்று தோன்றியிருக்கும் களைப்புறக்களும்—கோரைகளும் வாழ்ந்துகொண்டிருக்கும் வேளையிலே தங்கம் போன்ற ஓர் நெல் மணி தமிழன் வயலைவிட்டு அகன்றது தமிழ் மகனின் துர் அதிர்ஷ்டமே.

தமிழன் வாழும் இடமெல்லாம் சென்று தேசிய உணர்வை, விடுதலை வேட்கையை, தமிழ் உரிமை உணரச்சியை ஒவ்வோர் தமிழ் மகன் இதயத்திலும் சுடர்விட்டெரியச் செய்துள்ள ஓர் உத்தமர் டாக்டர் அவர்கள்?

அந்தத் தமிழ் தியாகியின், ஈழத் தமிழக விடுதலைப் போரின் முதல் வரிசைத் தளபதியின் ஆன்மா சாந்தியடையட்டும். அவர் இன்று நம்மிடையே இல்லாவிடினும் அவர் விட்டுச்சென்ற தமிழ்ப் பணியை இரும்பு உள்ளத்தோடு தொடர்வோமாக.

டாக்டர்போன்று விடுதலை வேட்கைகொண்ட ஆயிரம் ஆயிரம் இரும்பு மனிதர்கள் நம்மிடையே தோன்ற வேண்டும்; நம் தமிழ்ப் பணியும் தொடர வேண்டும்.

அதுவே விடுதலை வேட்கை கொண்ட எமது மறைந்த டாக்டருக்கு விடுதலைகோரி நிற்கும் தமிழர் நாம் செய்யும் ஓர் கைமாருகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையஎம்பிரார்த்தனைகள்.

—இவ்வாறு இலங்கைத் தமிழணிச் சபையின் பொதுச் செயலாளர் சிவ. நவஜோதி தமது இரங்கற் செய்தியில் குறிப்பிடுகிருர்.

## அவர் நினைவு என்றும் அகலாது

காரைமுன்னேற்ற மன்ற பொதுச் செயலானர் திரு. பி. துரைராசா டாக்டர் நாகநாதனின் மரணத்தை யிட்டு விடுத்த செய்தி.

டாக்டர் நாகநாதனின் மறைவு தமிழினத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவரின் நினைவு என்றென்றும் இழங்கைவாழ் தமிழ் மக்களின் மனதைவிட்டு அகலாது. அவரின் ஆத்மா சாந்தியடையக் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

## எம்மை நோக விட்டார்

(காரை செ. சுந்தரம் பிள்ளை)

செந்தமிழை உயிராகக்
கொண்ட செம்மல்
தேசத்தைப் பொன்னுக
மதித்த பக்தன்
பைந்தமிழுக் கரணுக
வாய்ந்த தொண்டன்
பண்பினிலே நன்ருகப்
பழுத்த நண்பன்
எந்தையர்கள் முந்தையர்கள்
வழியைப் பேணி
இறுதிவரை தமிழுக்காய்
உழைத்துத் தேய்ந்து
நொந்த பொழுதும் உறுதி
குலையான் எம்மை
நோகவிட்டான் இரும்பு நெஞ்சன்
நாகநாதன்.

## விதியே நீ சாகாயோ!

இரும்புமனம் இளகியதோ?
இருண்ட வானம்
இரவியினை மறைத்ததுவோ?
தமிழர்தாய் கண்ணில்
அரும்புகிற நீர்மேலும்
ஆருகிற்ருே?

அந்தோ நல் உளம் யாவும்
தவிக்க, வானம்
விரும்பியதோ? வித்தகனர்
கொள்கை சார்ந்தே
மேன்மை பெறக் கருதியதோ?
நாக நாதன்
அரும்பணியில் அமைதிபெற்றே
விடிவு தேட
ஆகாதோ? விதிநீயேன்
சாகாயோ சொல்?......

இ. நாகராஜன்.

## இ. தொ. கழக செயலாளர் அனுதாபம்!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் முன்னை நாள் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் இனத்தை ஓரணியில் திரட்டும்பொருட்டு 1962ம் ஆண்டு இறுதியில் மலைநாட்டில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகத்தைக் கட்டியெழுப்புவதற்கு டாக்டர் நாகநாதன் அவர்கள் முன்நின்று உழைத்தார். 1962ம் ஆண்டு இறுதியிலிருந்து 1965ம் ஆண்டுவரை தொழிலாளர் கழகத்தின் தலைமைப் பதவியையேற்று அவர் ஆற்றிய அரும்பெரும் சேவைகள் மலைநாட்டு தொழிலாளர்களின் மனதில் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவை. மலைநாட்டு இந்திய வம்சாவழி மக்களின் நலனில் அவர் பெரும் அக்கறை கொண்டிருந்தார்.

அவரின் மறைவு இலங்கை வாழ் தமிழ்பேசும் இனத்திற்கு விசேடமாக மலையக மக்களுக்கு ஓர் பேரிழப்பாகும்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு இலங்கைத்தொழிலாளர் கழக உறுப்பினர்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—இவ்வாறு இ. தொ. கழக பொதுச் செயலாளர் திரு. செ. கலியபெருமாள் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிடுகிறார்.

### நாகநாதன் பூதவுடல்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தனை முடிவுற்றவுடன், நாகநாதனின் பூதவுடலை தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் கைத்தாங்கலாக தாங்கியபடி சவக்குழி நோக்கி கொண்டு சென்றார்கள்.

சவக்குழியில் டாக்டரின் சடலம் இறக்கப்படுவதற்குமுன்னர், கிறிஸ்தவ, கத்தோலிக்க, சைவமத பிரார்த்தனை கீதங்கள் பாடப்பட்டன. சவக்குழியில் அமரர் நாகநாதனின் சடலம்இறக்கப்பட்டு, குழி மூடப்பட்டபோது, 'நாகநாதன் நாமம் வாழ்க, அவரது உணர்ச்சி வளர்க' என்ற கோஷம் வான் முட்ட எழுந்தது.

இறுதியாக 'எங்கள் ஈழத்தமிழ் நாடு' எனும் தமிழர் தேசிய கீதத்துடன் டாக்டரின் இறுதி மரியாதை முடிவுற்றது.

ஏனைய இனத்தவர்கள் பிரமிக்கும்படி, தங்கள் தலைவனுக்கு தலைநகரில் இவ்வளவு பெரிய மரியாதையைச் செய்து தமிழினம் தனது பெருமையை நிலைநாட்டிக்கொண்டு விட்டது.

### மலையக இளைஞர் பேரவையின் அனுதாபம்

தமிழரின் உரிமைகளுக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த மாவீரன் ஈ. எம். வி. நாகநாதன் மறைந்த செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரது குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

—இவ்வாறு மலையக இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை விடுத்த [illegible] செய்தியில் [illegible]

## அ. எ. வி. சங்கம் அனுதாபம்

'தமிழ்ப் பேசும் மக்களுக்காக அவர்கள் தம் நல்வாழ்வுக்காகத் தம்மை அற்பணித்த ஓர் தியாகச் செம்மலை, உயர்ந்த இலட்சியம் உள்ள உணர்ச்சிப்பிரவாகம் கொண்ட ஒரு தமிழ்த் தலைவனைத் தமிழ் கூறும் நல்லுலகம் இழந்து விட்டது. எமது மொழிவழித்தொழிற்சங்கங்களை உருவாக்க உதவிய அண்ணல் ஒருவர் அமரராகி விட்டார்.

'தமிழ் அரசியல் வானிலே திரிகரண சுத்தியுடன் பேசியும் செயலாற்றியும் வந்த ஒரு தமிழ்க்காவலன் மறைந்துவிட்டான். தனது தியாகச் சுவடுகளை வருங்கால நிலத்தில் விட்டுச்சென்றுள்ளார். தமிழ் மக்களின் நெஞ்சிருக்கும்வரை அவர் நினைவிருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து பேரின்பத்தை பெறுவதாகுக.

— இ. அந்தோனிப்பிள்ளை
தலைவர்
அ. எ. வி. சங்கம்

## ஆலாலு முயற்சி!

தமிழரசுக்கட்சியின்கட்டுப்பாட்டிலுள்ள சகல தொழிற் சங்கங்களின் சம்மேளனமொன்றை உருவாக்கும் முயற்சியில் தமிழரசுத் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவரான திரு: மூ. ஆலாலசுந்தரம் ஈடுபட்டுள்ளார்.

தற்போது தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள பத்து தொழிற் சங்கங்களின் விபரம் வருமாறு:—

ஆனையிறவு உப்பளத் தொழிலாளர் கழகம், இலங்கை நூற்றல் நெய்தல் ஆலைத் தொழிலாளர் கழகம், இலங்கை சுருட்டுத் தொழிலாளர் கழகம், இலங்கை வர்த்தக ஊழியர் கழகம், கண்ணுடித் தொழிலாளர் கழகம், இலங்கைபஸ் தொழிலாளர் கழகம், சீமெந்துத் தொழிலாளர் கழகம், பரந்தன் இரசாயன தொழிலாளர் கழகம், டாக்சி ஓட்டுவோர் கழகம், இ. தொ. கழகம்.

### அ. எ. வி. சங்கத்தின ஆண்டுக் கூட்டம்

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் 10 வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 21-8-71 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ், மாநகரசபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

"உனது நேரத்தை நன்கு மதி, பிறர்நேரத்தையும் நன்கு மதி, நேரம் பொன்னைவிடப் பெரிது, பொன் கொடுத்தாலும் நேரம் வராது."

—கவி யோகி சுத்தானந்த பாரதியார்.

காலம் பெறுமதியானது. காலத்தை வீணுக்காதீர்கள். மில்க்வைற் சலவைப்பவுடர் வாங்கிப்பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்துங்கள். பாவித்த மேலுறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3வது வாரம் ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் காட்சியளிக்கின்றது

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

**கிறவுண்** (மருதானை) **வின்சர்** (யாழ்நகர்) **இம்பீரியல்** (மட்டு நகர்)

மக்கள்திலகம் **எம். ஜி. ஆர்., வாணிஸ்ரீ, நாகேஷ்,**

எஸ். ஏ. அசோகன், எம். என். நம்பியார், ஜோதிலட்சுமி —நடித்த—

26-ம் திகதி முதல் **சங்கமம்**

# தலைவன்


டைரக்ஷன்:- தமாஸ் சிங்கமுத்து

---

இப்பொழுது காட்சியளிக்கிறது

**கெப்பிட்டல்-பிளாசா**

**லிடோ—வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)



நடிகர்திலகம் பத்மஸ்ரீ

**சிவாஜி கணேசன்**

மூன்று மாறுபட்ட வேடங்களில் நடித்து **ஆஸ்கார்** பரிசுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்ட முதல் தமிழ்ச் சித்திரம். தென்னகத் திரைகளில் மாபெரும் சாதனையை நிலைநாட்டியது

**மற்றும் ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார் நடித்த**

சாந்தி பிலிம்ஸ்

# தெய்வ மகன்

டைரக்ஷன் A. C. திருலோகசந்தர்


---

4வது வாரமாக காட்சிதருகின்றது

**சென்ட்ரல்** (மருதானை) 10, 2, 6. மணிக்கு

**ராணி** (யாழ்நகர்) **ராஜேஸ்வரா** (மட்டுநகர்)

# கஸ்தூரி திலகம்



சுந்தரராஜன்
சௌகார்ஜானகி
சிவகுமார்
லட்சுமி
கள்ளபாட் நடராஜா
ராதிகா
டி. ஆர். ராமச்சந்திரன்

—நடித்த—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆவணி மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்